மலர் : 21
இதழ் : 02

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

பிப்ரவரி 2026

தனிச்சுற்றுக்கு மட்டும்



## பிறர் நலமே

### தவக்காலம் தரும் படிப்பினை

# மறைவட்ட பொதுக்குழு கூட்டம்



முளகுமூடு



காரங்காடு



வேங்கோடு



திரித்துவபுரம்



மாத்திரவிளை

# உள்ளே...


★ **இயக்குநரிடமிருந்து...**

★ **அன்பியத்தில் சிறார்...**

அருள்பணி. **ஸ்டீபன்**

★ **முதுமைக்கு மணிமகுடம் சூட்டுவோம்...**

அருள்பணி. **எ. ஒய்சிலின் சேவியர்**

★ **பசுமையும் பாரம்பரியமும் இணைந்த (அருள்)வாழ்வு...**

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

★ **நுகர்வோரும் வாக்காளரும்...**

அருள்பணி. **சி. எட்வின் ராஜ்**

★ **தலைக்கவசம் உயிர்கவசம்...**

திருமதி. T. **ஷீலா**

★ **மன மாற்றம் பெற்று திருப்பயணிகளாவோம்...**

திரு. S.T. **டேவிட் ராஜ்**

★ **இயேசுவின் கண்மணிகள் குழந்தைகள்...**

திருமதி. R. **சுஜா**

★ **தன்னம்பிக்கையின் விதை...**

திரு. S. **ஜாண் பெல்லார்மின்**

★ **ஏன் இந்த அவசரம்? புரிந்துக்கொள்வோம்...**

திரு. N.K. **ரெஞ்சித்**

★ **லூர்து அன்னையும் சிறுமி பெர்னிதத்தும்...**

வேதியர். **மா. பேபிகமலா**

★ **கோ கோ விளையாட்டு விதிமுறைகள் மற்றும் விளையாட்டு முறை...**

திருமதி. M. **மேரி லிசி**

★ **நலத்திட்டங்கள்...**

★ **பங்களவில் புதிய நிர்வாகிகள்...**

★ **பொன்மலை தியான இல்லம்...**

★ **தவக்காலத்தில் நான்...**

★ **ஞாயிறு வழிபாடுத் தயாரிப்போம்...**



## ஆசிரியர் குழு

அருட்பணி. M. **ஆல்வின் விஜய்**

வேதியர் M. பேபி கமலா

திரு. S. ஜாண் பெல்லார்மின்

திருமதி. T. ஷீலா

திருமதி. K. ரெத்தினபாய்

## இயக்குநரிடமிருந்து



**இறையேசுவில் அன்பார்ந்தவர்களே!**

மனமும், வாழ்வும் மாற்றம் பெற்று, புது வாழ்வை நோக்கிய பதையில் புத்தாண்டில் உறுதியேற்றுப் பயணித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்களும் செபங்களும்.

நன்மையை பகுத்தறிய தூண்டும் எண்ணங்களையும், தன்னையும் பிறரையும் வாழ்விக்கும் நற்செயல்களையும், நிலைகுலைந்தோரையும் வாழ்வில் உயர்வடையச் செய்யும் வார்த்தைகளையும் தன்னைத்தானே வடிவமைக்கும் காலம் தவக்காலம். வழியறியாத பாதையில் கண்ணும் கருத்தும் வைத்து பயணிக்கும் நாம், நன்கு தெரிந்து அறிந்த பாதையில் பயணிக்கும் போது கருத்தில் கொள்வதில்லை. காரணம் அது அனுபவத்தால் கடந்த பாதை.

ஆம் அனுபவத்தை தன் வாழ்வில் படிப்பினையாகக் கொண்டவர் எவரும் இப்பூமியில் தடம் பதித்தே வாழ்கின்றனர். அவ்வாறு தன்னையே வாழ்வாக்கி, மனித வாழ்விற்கு படிப்பினையாக்கி, வாழ்வு அளித்த இறைமகன் இயேசுவின் திருப்பாடுகளை அடையாளப்படுத்துகிறது இத்தவக்காலம். தாழ்ச்சியும், உண்மையும். கீழ்படிதலும், இறையச்சமும் கொண்டு வாழ்ந்தால் அன்னையின் அரவணைப்பும் அருளாசீரும் நம்மோடு நிறைவாகத் தங்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கான அனுபவமே லூர்து அன்னை பெர்னதெத்துக்கு அளித்த காட்சி.

ஒவ்வொரு நாளும் மணித்துளிகள் மாறுகின்றன. இயற்கை சூழல்கள் மாறுகின்றன. நாகரிகம் என்ற பெயரில் கலாச்சாரம் மாறுபடுகின்றது. படைத்த நாள் முதல் காலையும் மாலையும் மாறுகின்றது. இவையெல்லாம் மாற்றத்திற்கான அடையாளங்கள். அதுபோல மனித வாழ்வும் தவக்காலம் என்ற பெயரில் அடையாளத்திற்காக மாற்றம் பெறுகிறதே தவிர மனமாற்றம் என்பது இல்லாத நிலை காணப்படுகிறது.


மனத்தால் மாற்றம் பெறுவோம். அன்பிய குடும்பங்களால் ஒன்றிணைந்து, உலகின் ஒளியைப் பெற்றவர்களாக மனமாற்றத்தால் அகத்தூய்மை அடைந்து வாழ்வோம் என்று மனமார வாழ்த்துகிறேன்

பணி தோழமையில்

அருட்பணி. **M. ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பியப் பணிக்குழு.

# அன்பியத்தில் சிறார்

**அருள்பணி. ஸ்டீபன்,**
தாளாளர், நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, களியக்காவிளை.




அணில் ஒன்று மரத்தில் அங்கும் இங்கும் தாவித் தாவி விளையாடிக்கொண்டிருந்தது. திடீரென்று பிடிதவறி எதிர்பாராத விதமாக மரத்திலிருந்து தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்தின் தலையில் பொத்தென்று விழுந்தது. சுர்ர்.... என்று கோபம் வந்தது சிங்கத்திற்கு. "நான் என்பாட்டுக்கு ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தேன். என்னை தொந்தரவு செய்த உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கூறி கொல்ல முயன்றது.

"ஐயோ என்னை ஒன்றும் செய்யாதே நான் தெரியாமல் விழுந்துவிட்டேன்" என்று கெஞ்சியது அணில்.



எனக்கு பசிக்கிறது, ஒரு சிறிய நெல்லிக்காய் போல உன்னை சுவைக்கிறேன் பார் என்று கையை ஓங்கியது சிங்கம் "என்னை மன்னித்து விடு என்னைக் கொல்லாதே" நடுங்கியவாறே மீண்டும் கெஞ்சியது அணில்.

"உன்னை பார்த்தால் பாவமாக இருக்கு. உன்னை விட்டுவிடுகிறேன். ஆனால் என் சந்தேகத்தை தீர்க்க சரியான பதில் நீ தர வேண்டும்."



"என்ன சந்தேகம்?" என்றது அணில்

சிங்கம் சொல்ல ஆரம்பித்தது. நீ எப்போதும் சந்தோசமாக அங்கும் இங்கும் ஓடுகிறாய். சில், வில் என்று கத்தி, கத்தி கொண்டாடுகிறாய். உன்னிடத்தில் சோர்வை பார்க்க முடியவில்லை, சோகமும் உன் முகத்தில் இல்லை. எப்போதும்

மகிழ்ச்சியாகவும் இருக்கிறாய். என்னால் மகிழ்ச்சியாகவும், முகம் மலர்ச்சியாகவும் இருக்க முடியவில்லை. நீ உன் மகிழ்ச்சியின் இரகசியத்தை சொன்னால் மட்டுமே உன்னை விடுவிக்கிறேன் என்றது.

"ஓ இவ்வளவு தானா. இது ரொம்ப சுலபம் இப்படியே வசதியாக உன் பார்வைக்கு எளிதாய் இருக்கும் இடத்தில் நின்று சொல்கிறேன்" என்று பக்கத்தில் இருந்த..... மரத்தின் மீது ஒளிந்து நின்று கொண்டு சொல்ல ஆரம்பித்தது.

நான் பழங்களையும், பூக்களையும் கொறித்து செல்வேன். என் தேவைக்கு அதிகமான எதையும் தின்று தீர்ப்பதும் இல்லை, தேவைக்கு அதிகமானதை அபகரிப்பதும் இல்லை.

நீ அப்படி இல்லை மற்றவர்களை கொன்று, தின்று உயிர் வாழ்பவன். மற்றவர்களின் கண்ணீரில் மகிழ்ச்சிகாண நினைப்பவன். நல்லது மட்டுமே மனதில் நினைத்து பார். மகிழ்ச்சி தானாக மனதில் வரும், முகத்திலும் தெரியும். நல்லது நினைப்பவர்களிடம் எப்போதும் உற்சாகம் ஊற்றெடுக்கும். இது தான் அந்த இரகசியம் வரட்டுமா... "பை.. பை" என்று சொல்லிக்கொண்டே குதித்து தாவி மரத்தில் ஏறி சென்றுவிட்டது.

குழந்தைகளே சிரித்த முகமும், உற்சாகமான உடலும் தேவை என்றால் மனதில் எப்போதும் நல்ல எண்ணங்களே இருக்கவேண்டும்.

**நல்ல எண்ணங்கள் என்றால்**

1. என்னை பற்றி நான் நேர்நிலையாக நினைப்பது மற்றும் பேசுவது. உதாரணமாக நான் நல்லவன்(ள்). நான் இறைவனின் பிள்ளை. நான்.......

2. பிறரை பற்றி நேர்நிலையாக நினைப்பது மற்றும் பேசுவது. நீங்கள் நல்லவர். உங்களை எனக்கு பிடிக்கும். உங்கள் உதவி எனக்கு தேவை. நம் எல்லோருக்கும் இறைவன் ஒருவரே என்று நினைப்பது.

3. இந்த உலகம் நல்ல உலகம். இந்த படைப்புகள் நல்லவை. இவை இறைவன் நமக்கு கொடுத்த கொடை இந்த இயற்கையோடு நட்பிலும், உறவிலும் வாழவேண்டும் என்று நினைப்பது.

   மனப்பாடம் செய்ய: "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்." மத்: 5:8

# முதுமைக்கு மணிமகுடம் சூட்டுவோம்

**அருள்முனைவர். எ. ஒய்சிலின் சேவியர்,**
மறைவட்ட முதல்வர், திரித்துவபுரம்.





முதுமை என்கிற வார்த்தையை
எண்ணும் போதே
எழுச்சியும் மகிழ்ச்சியும் என்னில்
ஊற்றெடுக்கிறது.
ஆனந்த ஆர்ப்பரிப்பு என்னை
அரவணைக்கிறது.
முதுமை கடவுளின் சாபம் அல்ல
அருமையான வரம்.
முதுமை மனித பருவ நிலையின்
பெருமையானப் பருவம்.
முதுமை கடவுள் மனிதர்களுக்கு
தரும் இரண்டாம்
குழந்தைப் பருவம்.
குழந்தை அடம் பிடிக்கும், அன்பு செய்யும், அரவணைக்கும்.
முதுமை பருவம் சுமையானப் பருவமல்ல
சுகமானப் பருவம்.
முதியவர்கள் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல;
அவர்கள் சுமக்கப்பட வேண்டியவர்கள்.
முதியவர்கள் வெறுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல;
அவர்கள் சிறக்கப்பட வேண்டியவர்கள்.
முதியவர்கள் மறக்கப்பட வேண்டியவர்கள் அல்ல;
அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்
முதுமையில் இருக்கும் அறிவுக் கூர்மையானது.
முதுமையில் இருக்கும் ஆற்றல் அற்புதமானது.
முதுமையில் இருக்கும் அன்பு ஆழமானது.
முதுமையில் இருக்கும் அனுபவம் மாண்பு மிக்கது.
முதியவர்களை ஏற்றுக்கொள்ளாத சமூகம்
முழுமையற்ற முதிர்ச்சியற்ற சமூகம்.
முதியவர்களை மதிக்காதக் குடும்பங்கள்
முன்மதியற்றக் குடும்பங்கள்.
முதியவர்களை முன்னுதாரணமாய் முன்வைக்கிற
சமூகமும், குடும்பமும், குலமும் செழிக்கும்.
முதியவர்களை முன்வைத்து செய்யும் அனைத்தும்

உயரமாய் உயர்ந்து நிற்கும்.
சிறப்பானதாய்ச் சிறகடித்துப் பறக்கும்.
முதியவர்களின் தலையீடு இருக்கும் எதுவும்
தலைத்தூக்கி நிமிர்ந்து நிற்கும்.
முதியவர்கள் முற்றும் துறந்த துறவிகள் அல்ல.
அன்பை எதிர்பார்க்கும் அதிசயப் பிறவிகள்
முடிந்த அளவு அர்ப்பணித்தவர்களே முதியவர்கள்.
அவர்கள் வாழ்வு முடியும்வரை அவர்களை நாம்
தூக்கி எறியாமல் தூக்கி சுமப்போம்.
முதியவர்களை நாம் சுமந்தால்
கடவுள் நம்மைச் சுமப்பார்.
இன்றைய முதியர்கள் நேற்றைய இளையோர்கள்.
இன்றைய இளையோர்கள் நாளைய முதியவர்கள்.
நாம் முதுமையைச் சுமந்து கொண்டிருக்கிறோம்
என்பதை மறவாமல் இன்றைய முதியவர்களை
இயன்றவரைப் பாசத்தோடுப் பராமரிப்போம்.
முதுமையைப் போற்றுவோம்
முதியவர்களை மதிப்போம்
முதுமைக்கு மணிமகுடம் சூட்டுவோம்.
முதியவர்களை கண்மணிபோல் காப்போம்
முதியவர்கள் மகத்தானவர்கள் என்று உணர்வோம்
முதிர்ச்சியான சமூகத்தைக் காண்போம்
முதியவர்கள் தூக்கிவீசப்பட வேண்டியவர்கள் அல்ல
அவர்கள் தூக்கிசுமக்கப்பட வேண்டியவர்கள்
முதியவர்கள் இல்லையென்றால் முதிர்ச்சியான சமூகம் இல்லை
முதியவர்கள் முன்னுதாரணமாய் முன்னிறுத்திவோம்
முதுமைக்கு மணிமகுடம் சூட்டுவோம்.

# பசுமையும் பாரம்பரியமும் இணைந்து (அருள்)வாழ்வு

**அருள்பணி ம. டைட்டஸ் மோகன்**, இத்தாலி.



1226 ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி மரணத்தை சந்தித்த புனித பிரான்சிஸ் அசிசியின் 800ஆம் ஆண்டு (1226-2026) இவ்வாண்டு. திருஅவை ஜனவரி 10, 2026 முதல் ஜனவரி 10, 2027 வரை பிரான்சிஸ்கன் சிறப்பு ஜூபிலி ஆண்டினை அறிவித்துள்ளது. "**புனித பிரான்சிஸ் வாழ்கிறார்**" (San Francesco Vive) என்பதே ஜூபிலியின் மையக் கருப்பொருள். "**கோதுமை மணி மண்ணில்**

**விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்**" (யோவான் 12:24) எனும் ஆழமான உண்மையை இக்கருப்பொருள் எதிரொலிக்கிறது. "**நீ விதைக்கும் விதை மடிந்தாலொழிய உயிர்பெறாது**" (1 கொரி 15:36) என்கிறார் புனித பவுல்.

ஆம், விதையாய் விழுந்து மடிந்து எழுந்து இன்றும் காலத்தால் கரையாத காவியமாய் பல இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் அசிசி நகர் புனித பிரான்சிஸ். ஏழ்மை, சகோதரத்துவம், சமாதான வேட்கை, இயற்கையில் இறைவனை காணும் அருள்வாழ்வு என "**பசுமையும்; பாரம்பரியமும்**" கலந்த அவரது வாழ்வு பயணமே இன்றளவும் நின்று நிலைக்கிறது. இவையே நம் திருஅவையையும், பொது சமூகத்தையும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

### பசுமையும் பாரம்பரியமும்

நாம் சிந்திக்கும் பசுமையும் பாரம்பரியமும் வாழ்வின் அனைத்து தளங்களையும் தொடும் ஓர் உயிரியக்கம். சற்று கற்பனை செய்து பார்ப்போம்! பச்சை நிறத்தில் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஒரு தோட்டம். அங்கு பழுத்த மரங்கள் தங்கள் வேர்களால் பூமியைத் தழுவி, புதிய கிளைகளாலும் இலைகளாலும் வானத்தைத் தொட்டு நிற்கின்றன. வேர்கள் மண்ணோடு இறுகக் கட்டிப்பிடித்திருக்கும் வரை மட்டுமே மரத்திற்கு வலிமை; கிளைகளும் இலைகளும் தண்டோடு ஒன்றித்திருக்கும் வரை மட்டுமே காய்களும் கனிகளும். வேர் என்பது பாரம்பரியம்! ஆழமாக பூமியில் பரவி, காலங்காலமாக வந்த



ஞானத்தை உறிஞ்சி, அடித்தளத்தை உறுதிப்படுத்தும். தண்டு என்பது பசுமை! சூரிய ஒளியை ஈர்த்து, புதிய உயிரோட்டமாய் இலைகளை, கிளைகளை, காய்களை, கனிகளைத் தரும்.

இது வெறும் உருவகமல்ல. பசுமை – பாரம்பரிய இணைப்பின் கவித்துவ சித்திரம். பொங்கலின் சூரிய ஒளியில் மலரும் பச்சை நெற்பயிர்கள் போல, பாரம்பரிய அம்சங்களில், விழாக்களில் பசுமை தழைக்கிறது; பசுமையான எண்ணங்களால் அன்றாடம் வாழ்வில் ஏற்றங்கள் பிறக்கிறது. பசுமையும் பாரம்பரியமும் தண்டவாளமாய் ஒரே இலக்கை நோக்கி செலுத்தும் அடிப்படை அம்சங்கள். ஒன்று

தடம் மாறினாலும் வாழ்க்கை அழிந்து விடும். பாரம்பரியம் மட்டுமே போதும் என்பவர்களும், பாரம்பரியமே வேண்டாம் பசுமை மட்டுமே போதும் என்பவர்களும் தவறிழைக்கிறார்கள். பசுமை இழந்து பாரம்பரியம் தனித்து நிற்க முடியாது அல்லது பாரம்பரியம் மறைந்து பசுமை மட்டும் வெறும் அழகியலாய் வென்று காட்ட முடியாது. இரண்டுமே இறைவனின் கொடை! பாரம்பரியத்தை வெறும் சடங்கு சம்பிரதாயங்களோடு சுருக்கிக் கொள்வதும் தவறு. பசுமை என்பதனை வெறும் இயற்கையோடு முடக்கிக் கொள்வதும் தவறு. சமூகம்; குடும்பம் அரசியல் பண்பாடு என வாழ்வியலின் அனைத்து தளங்களிலும் பசுமையும் பாரம்பரியமும் அவசியம். இதுவே சரியான அணுகுமுறை.

**இறைவனின் கொடை! இயற்கையின் கொடை!**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், "**புகழனைத்தும் உமதே!**" (Laudato Si') என்கிற சுற்றுமடல், நமது பொது இல்லமாகிய பூமியைப் பாதுகாத்தல் பற்றியதாக இருப்பினும் மனித வாழ்வின் அனைத்துவித பரிமாண வளர்ச்சியைக் குறித்தே பேசுகிறது. பசுமை என்பது வெறும் மரங்கள், செடிகள், காடுகள் மட்டுமல்ல. அது நம் வாழ்வின் அஸ்திவாரம், ஒருங்கிணைந்த செயல்பாடு. சுத்தமானக் காற்று, தூய்மையான நீர், ஆரோக்கியமான உணவு முதல் உதவும் மனப்பாங்கு, பகிர்ந்து வாழும் தன்மை என அனைத்தும் இயற்கையின் பசுமையிலிருந்துதான் நமக்குக் கிடைக்கின்றன. பகிர்ந்து வாழும் நல்லெண்ணத்தையும் இயற்கை நமக்கு கற்பிக்கிறது!

இந்தப் பூமிப்பந்து ஒரு பெரிய குடும்பம். அதில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என அனைவரும் சமம். இந்தச் சமநிலையைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமை. ஆனால், நாம் என்ன செய்கிறோம்? காடுகளை அழித்து நகரங்களை உருவாக்குகிறோம். ஆறுகளில் கழிவுகளைக் கலக்குகிறோம். நெகிழி பொருட்களால் நிலத்தையும் நீரையும் மாசுபடுத்துகிறோம். இதனால் பருவநிலை மாற்றம். இங்ஙனம் இயற்கையை பாழ்படுத்துவது தொடர்கதையாய் ஒருபுறமெனில், இன்னொரு பக்கம் செயற்கைத்தனமான வாழ்க்கையில் ஆனந்தம் காண முயல்கிறோம். எண்ணங்களில் சுயநலம், எங்கும் எதிலும் பொருளீட்டும், பணமீட்டும் நோக்கு, மனிதர்களை பயன்படுத்தி தூக்கி வீசும் மனப்பாங்கு, நவீன கருவிகளின் அச்சுறுத்தல்கள். இவை யாவும் மனித குலத்திற்கு பெரும் சவால்களே! நாம் பசுமை என்று சொல்லிக் கொள்ளும் இன்றைய வளர்ச்சி உண்மையானதாக, நீடித்த எழுச்சி கொண்டதாக, எல்லோரும் பயன்பெறும் விதமாக அமைந்திட வேண்டுமெனில் பாரம்பரிய வேர்களை நாம் மறந்து விடலாகாது. ஹென்றி டேவிட் தோரோ, "**இயற்கையோடு இணைந்து வாழ்தலே நிலைத்திருக்கும் வளர்ச்சி**" என்கிறார்.

பாரம்பரியம் என்பது நம்முடைய முன்னோர்கள் வாழ்ந்த

வாழ்க்கையின் அறிவும், அனுபவங்களுமே. அது நம் கலாச்சாரம், கலைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள், ஆன்மீக சிந்தனைகள் எல்லாவற்றிலும் மறைந்திருக்கின்றன. இவையே நமக்கு ஒழுக்கத்தையும், அன்பையும், சமூகப் பொறுப்புணர்வையும் கற்றுக்கொடுக்கின்றன. உதாரணத்திற்கு, பாரம்பரிய விவசாய முறைகள், இயற்கை வைத்தியம், கைவினைப் பொருட்கள், கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை, பகிர்ந்து உண்ணும் பாங்கு போன்ற பல நல்ல விஷயங்கள் நம் பாரம்பரியத்திற்கே உரித்தானவை. இவற்றை நாம் இன்று தூக்கியெறிய துணிந்து விட்டோம். விளைவு, உடல்நல குறைபாடுகள், உறவுகளில் இறுக்கங்கள் என வாழ்வின் அர்த்தமிழந்து நிற்கிறோம். இன்னொரு முக்கிய சிந்தனையையும் நாம் மறந்து விடக்கூடாது. பாரம்பரியம் பெயரில் பல மூடநம்பிக்கை செயல்களையும் சிலர் தொடர ஆசைப்படுவது உண்டு. அது பூனையைக் கட்டிப்போட்டு பூஜை செய்யும் கதையாகி விடும். எனவே, நமது பாரம்பரிய செயல்களும் மானுட வளர்ச்சிக்கு உகந்ததாய் அமைந்தால் மட்டுமே கடைபிடிப்பது நல்லது.

சுருங்கக்கூறின், பசுமை என்பது இயற்கையின் இசையை இழக்காமல் வாழ்தல்; பாரம்பரியம் என்பது நமது மூதாதையர்களின் ஞானம், ஆன்மீக மரபுகள், கலாச்சார விழுமியங்கள் என காலத்தின் சூறாவெளியிலும் பெயர்ந்துவிடா வேர்கள். அன்றாட தனிமனித, குடும்ப, சமூக வாழ்வில் இரண்டுமே தேவைப்படுகின்றன. இரண்டும் இணைந்து பயணிப்பதால் மட்டுமே நமது உடல், உள்ளம், உறவுகள், ஆன்மீகம் வளர்கின்றன, இறைவனின் படைப்பை மதித்து, அன்பின் பாலத்தை உருவாக்குகின்றன. எனவே பசுமையும் பாரம்பரியமும் வெறும் இயற்கையின் அழகு மட்டுமல்ல. அது மனிதர்களின் ஒருமைப்பாட்டாலும், தினசரி அர்ப்பணிப்பாலும் வளர்க்கப்படும் ஓர் உயிரோட்டமான பாரம்பரியம் என்பதனை உணர்ந்து கடைபிடிப்போம்.

**புனித பிரான்சிஸ் அசிசியார் சான்று**

சமீபத்திய அசிசி பயணத்தில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு காட்சி இன்னும் என் நெஞ்சில் நிலைத்திருக்கிறது. புனித பிரான்சிஸ் அசிசியாரின் கல்லறைக்கு முன்னால், ஒலிவ எண்ணெயில் தொடர்ந்து எரியும் "***நிலையான ஒளி***" (Lampada Votiva). 1939ஆம் ஆண்டு ஜுன் 18ஆம் தேதி, திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் புனித பிரான்சிஸை இத்தாலியின் பாதுகாவல் புனிதராக அறிவித்தபோது, அதாவது, அக்டோபர் 4ஆம் தேதி முதல் இந்த விளக்கு பசிலிக்காவின் கல்லறை அறையில்(அடிக்கட்டு அறை) ஏற்றப்பட்டது. முதல் ஆண்டு லாசியோ மாகாணம் எண்ணெய் வழங்கியது. அன்று முதல் இன்று வரை, ஒவ்வொரு ஆண்டும் ஒரு இத்தாலிய மாகாணம் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆண்டு முழுவதற்கும் தேவையான ஒலிவ

எண்ணெயை இலவசமாக அளிக்கிறது. இந்த ஒரே விளக்கு எரிவதன் மூலம், இத்தாலியின் அனைத்து மாகாணங்களும், நகரங்களும் ஒரே இதயத்துடன் ஒன்றிணைந்து புனிதரின் பாதுகாப்புக்கு நாட்டை ஒப்புக்கொடுப்பதை இச்செயல் வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 3-4 தேதிகளில், அந்த மாகாணத்தின் பிரதிநிதிகள் அசிசிக்கு வந்து எண்ணெயை வழங்கி, விளக்கை மீண்டும் ஏற்றுகின்றனர். இது தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், நன்றியுணர்வு ஆகியவற்றின் அழகிய அடையாளம். உலகப் போர்கள், அரசியல் மாற்றங்கள் எதுவும் 86 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த பாரம்பரியத்தைத் தடுக்கவில்லை. அந்த விளக்கின் ஒளி இன்று நமக்கு சொல்கிறது: சமாதானம் வெறும் கருத்து அல்ல. அது தொடர்ந்து எரிய வேண்டிய ஒரு தீ. பசுமை என்பது சமாதானத்தின் அடையாளம் மட்டுமல்ல - அது ஒரு பொறுப்பு. சிறிய சிறிய தியாகங்களால், அர்ப்பணிப்புகளால் கட்டப்படும் ஒரு பெரும் கனவு. உண்மைதானே! நாடும் திருஅவையும், மக்களும் இயற்கையும் ஒரே குடும்பமாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். அந்த அழைப்பை நினைவூட்டும் வகையில், ஆண்டுகள் கடந்தாலும் அணையாது எரியும் அவ்விளக்கு பசுமையின் வாக்குறுதியாகவும், பாரம்பரியத்தின் சாட்சியாகவும் துலங்குகிறது. அது வெறும் ஒரு விளக்கு அல்ல; மாறாக, ஒரு வாழும் பிரார்த்தனை. அந்த ஒளியை நாமும் நம் இதயத்தில் ஏந்திச் செல்வோம்! ஒரு நாள் நாம் அனைவரும் ஒரே தீயில் எரியும் ஒரே விளக்காக மாறுவோம் எனும் நம்பிக்கையுடன்... பசுமையும் பாரம்பரியமும் என்றும் வாழ்க! புனித பிரான்சிஸ் அசிசியாரின் ஏழ்மை, சகோதரத்துவம், ஒப்புரவு, அமைதி, இயற்கை ஆர்வம் எனும் நற்செய்திகளும் நற்செயல்களால் என்றும் நம் வாழ்வில் அணையாமல் ஒளிகொடுக்கட்டும்!

## இறைவனின் தோட்டத்தில் நமது பொறுப்பு

அன்பிய இறைமக்களே! பசுமையும் பாரம்பரியமும் இறைவனின் இரு இதயத் துடிப்புகள். ஒன்று பூமியைத் தாங்க, மற்றொன்று வானத்தைத் தொட. இவை இணைந்து வாழ்ந்தால் வளர்ந்தால் மட்டுமே நமது வாழ்வு புனிதப் பாடலாக மாறும். விவிலியம் நம்மை பூமியின் காவலர்களாக (தொ.நூல் 2:15) வாழ அழைக்கிறது. நமது கடமை பாரம்பரியத்தை பண்படுத்தி, பசுமையால் வளம் காண்பது. செயல்படுவோமா? :

1. உங்கள் குடும்பத்தில் பசுமை மற்றும் பாரம்பரியத்தை இணைக்க எந்தெந்த செயல்களை இன்று தொடங்கலாம்?
2. உங்கள் சமூகத்தில் இறைவனின் படைப்பைப் பாதுகாக்க பாரம்பரிய ஞானத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?


# நுகர்வோரும் வாக்காளரும்

## விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் – ஜனநாயகத்தின் இரு முகங்கள்

**அருள்பணி எட்வின் ராஜ் சி.**



தேர்தல் திருவிழாவின் ஆரவாரங்களும் கட்சித்தாவல்களும், கூட்டணி தொலைக்காட்சிகளிலும், வலையொலிகளிலும் நிரம்பி வழியத் தொடங்கிவிட்டன. பண்டிகை பேரங்களும் காலங்களில் தள்ளுபடி விலையில் பொருள்களை விற்பதாக, தேங்கிப்போன தங்கிப்போன, தரமிழந்த பொருட்களை நுகர்வேரின் தலையில் கட்டுவதைப்போல, இலவசங்கள், விலையில்லா மடிக்கணினிகள், பொங்கல் சிறப்புத் தொகை என்று ஆளும் கட்சி ஒருபுறம் ஓட்டை ஏமாற்றி வாங்கிட விளம்பரங்களை தொடங்கிவிட்டது. எதிர்கட்சியும் நாங்கள் ஆயிரத்தை இரண்டாயிரம் ஆக்குவோம் என்று போட்டிக்கு சலுகைகளை அறிவித்துவிட்டது. விளம்பரத்தையும் திரைக்கவர்ச்சியையும் மட்டுமே வைத்து இவர்கள் ஓட்டை வாங்கி விடலாம் என்று நடிகனும் கிளம்பிவிட்டான். இறுதியில் ஏமாறுபவர்கள் நாமே.



வீதியில் விற்கப்படும் கீரைக்கு தரம் பார்த்து, பேரம் பேசி வாங்கும் நாம், பலநேரங்களில் பெரும் மளிகைக்கடைகளில் (Super Market) தரம் பார்த்து வாங்குவதில்லை. விளம்பரம் பார்த்தே வாங்குகிறோம். உற்பத்தி விலையில் பல மடங்கு அதிகம் கொடுத்து வாங்கிச்செல்கிறோம். அதேபோல்தான் வெற்று வாக்குறுதிகளுக்கும், இலவசங்களுக்கும், பணத்திற்கும் வாக்கை விற்று விட்டு, அடுத்த ஐந்து ஆண்டுகள் புலம்பித் தவிக்கிறோம். சனநாயகத்தை பணத்தால் வெற்றுவிட முடியும் என்று அவன் நினைக்கிறான். நாமும் பணத்திற்கோ இலவசத்திற்கோ வாக்கை விற்று சனநாயகத்தை குழிதோண்டி புதைத்து விடுகிறோம்.

ஒரு சமூகத்தின் ஆரோக்கியத்தையும் சனநாயகத்தின் தரத்தையும் அளவிட இரண்டு முக்கியமான அளவுகோல்கள் உள்ளன:

**(1) நுகர்வோரின் விழிப்புணர்வு (2) வாக்காளர்களின் பொறுப்புணர்வு**

இந்த இரண்டு கோணங்களும் தனித்தனியாகத் தெரிந்தாலும் இரண்டும் ஒரே நேர்கோட்டில்தான் நிற்கின்றன. இரண்டும் சனநாயகம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள். இவை இரண்டும் தேர்வுசெய்யும் சக்திகள் ஒருவர் சந்தையில் பொருளைத் தேர்வு செய்கிறார் அதேபோல் தேர்தலில் ஆட்சியையும் தேர்வு செய்கிறார்.

**1. சந்தையில் நுகர்வோர் – அரசியல் வாக்காளர்**

| | | |
|---|---|---|
| சந்தை உலகம் | – | அரசியல் உலகம் |
| பொருள் வாங்குபவர் | – | ஆட்சியைத் தேர்வு செய்பவர் |
| தரத்தை ஆராய்பவர் | – | வேட்பாளரை மதிப்பிடுபவர் |
| விலை ஒப்பிடுபவர் | – | கொள்கைகளை ஒப்பிடுபவர் |
| மோசடி எதிர்ப்பவர் | – | ஊழலை எதிர்ப்பவர் |

சந்தையில் ஒரு நல்ல நுகர்வோர் ஏமாறமாட்டார். அதுபோல் ஒரு நல்ல வாக்காளர் ஏமாறினால் நாடே பாதிக்கப்படும்.

**2. நுகர்வோர் உரிமைகள் வாக்காளர் உரிமைகளின் பிரதிபலிப்பு**

நுகர்வோர்க்கான சட்டங்கள் அவரை பாதுகாக்கின்றன. அதுபோல சனநாயகம் வாக்காளருக்கும் அதிகாரமளிக்கிறது.

***நுகர்வோர் உரிமைகள்***

சரியான தகவல் பெறும் உரிமை பாதுகாப்பான பொருள் பெறும் உரிமை நல்லதை தேர்வு செய்யும் உரிமை, புகார் செய்யும் உரிமை.

***வாக்காளர் உரிமைகள்***

சுதத்திரமாக வாக்களிக்கும் உரிமை, அரசியல் தகவல் அறியும் உரிமை, நல்ல ஆட்சியை எதிர்பார்க்கும் உரிமை, தவறான ஆட்சியை மாற்றும் உரிமை.

சனநாயகத்தின் இந்த இரண்டு அளவுகோல்களிலும் சரியான தகவலுடன் சரியாக செய்யப்பட்ட தேர்வே நியாயத்தை உருவாக்கும். பல நேரங்களில் நல்ல பொருட்களை வாங்கத் தவறிவிடுகிறோம். விளம்பர வார்த்தைகளால் வெற்று வாக்குறிதிகளால், நல்ல அரசியல் தலைவர்கள், நல்ல அரசியல் கட்சிகளை புறந்தள்ளிவிட்டு நாட்டை சுரண்டித்தின்னும், லஞ்சம் ஊழல் செய்து நாட்டை கெடுக்கும் கயவர்களுக்கே வாக்களிக்கிறோம்.

**3. ஏமாறும் நுகர்வோர் ஏமாறும் வாக்காளர்**

விளம்பரத்தை நம்பி தரமற்ற பொருள் வாங்குவது போல, வாக்குறுதியை நம்பி தரமற்ற அரசியல்வாதியைத் தேர்வு செய்கிறோம். பொருள் மோசடி ஒருவரை மட்டும் பாதிக்கும். அரசியல் மோசடி ஒரு தலைமுறையையே பாதிக்கும். நம் தவறால் எதிர்கால தலைமுறையையே அழிக்க வேண்டாம்.

**4. பொறுப்புள்ள வாக்காளர் விழிப்புணர்வுள்ள நுகர்வோர்**

நாம் காலாவதியான பொருள் என தெரிந்தே வாங்குவதில்லை. போலியான பிராண்டை நம்புவதும் இல்லை, ஆனால் வாக்கென்று வந்துவிட்டால் நாம் ஏமாற்றுபவர்களுக்கே மீண்டும் மீண்டும் வாக்களிக்கிறோம். பணம், மதுபானம், சலுகை வாங்கி வாக்களிக்கிறோம். இல்லையென்றால் நடிகன் மீது கொண்ட கவர்ச்சி என்னும் பிராண்டை

வைத்து ஓட்டு போட நினைக்கிறோம். சந்தையில் நம்முடைய பணமும் பொருளின் தரமும் எந்த அளவு முக்கியமோ, அதுபோல தேர்தலில் நம்முடைய வாக்கு அதைவிட முக்கியமானது.

### 5. அரசியல் என்பது "சமூக சந்தை"

அரசியல் என்பது அதிகாரத்தை விற்கும் சந்தை அல்ல, அது பொறுப்பை ஒப்படைக்கும் புனிதமான செயல், வாக்காளர்கள் என்பவர்கள்: குடிமக்கள் நாட்டின் உரிமையாளர்கள் நாம் தவறான தேர்வு செய்தால் நாட்டின வளமும், நெறியும், எதிர்காலமும் பாதிக்கப்படும்.

### 6. ஏன் வாக்காளர் கல்வி விழிப்புணர்வு அவசியம்?

ஒரு நுகர்வோர் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தால் அவர் பணத்தை இழப்பார். ஒரு வாக்காளர் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தால் அவர் நாட்டையே இழப்பார், அப்படியே வாழ்க்கையையும் இழப்பார். அதனால்: அரசியல் அறிவு, தகவல் பகுத்தறிவு, ஊழல் குறித்த புரிதல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, தற்சார்பு பொருளாதாரம், சமூக பொறுப்பு இவை எல்லாம் வாக்காளருக்கு அவசியமான "**குடிமைக் கல்வி**"

### 7. நல்ல சமூகத்தின் அடையாளம்

ஏமாறாத நுகரவோர், விற்கப்படாத வாக்கு, கேள்வி கேட்கும் குடிமக்கள், பொறுப்புடன் தேர்வு செய்பவர்.

தரமான பொருளை வாங்குவது எப்படி உரிமையோ, அதேபோலதான் நியாயமான அரசை தேர்வு செய்வதும் நமது உரிமை. நுகர்வோராக பொருள்கள் வாங்கும் போதோ சேவைக்காக காத்திருக்கும் போதோ நாம் கவனமாக இருக்கிறோம். அதுபோல வாக்குச்சாவடியில் வாக்காளராக வாக்களிக்க செல்லும் போதும் விழிப்புடன் இருப்போம். நல்ல தலைவர்களை, நல்ல கட்சியை தேர்வு செய்வோம். நுகர்வோராகவும் வாக்காளராகவும் சரியாக செயல்பட்டு நம்மை மட்டுமல்ல சனநாயகத்தையும் மீட்டெடுப்போம்.

## தலைக்கவசம் உயிர் கவசம்



திருமதி. T. **ஷிலா**,
களப்பணியாளர்.

இன்றைய இயந்திர உலகில் நமது பயணம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது. நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களின் பயணத்திற்கு இருசக்கரவாகனம் உற்ற நண்பனாக விளங்குகிறது. விரைவாக எளிதாக செல்ல உதவும் இந்த வாகனத்தினால் சில வேளைகளில் விபத்துகள் ஏற்படுகின்றன. அத்தகை விபத்துகளில் நம் உயிரைக் காக்கும் உன்னத கருவியே "**தலைக்கவசம்**"

### விபத்துகளும் பாதிப்புகளும்

சாலை விபத்துகளில் உயிரிழப்பவர்கள் பெரும்பாலும் இருசக்கர

வாகனங்களில் பயணம் செல்பவர்களே. விபத்து நடக்கும் போது மனித உடலின் மிகவும் மென்மையான பகுதியான தலை தரையிலோ அல்லது பிற வாகனங்களிலோ மோதும் போது மூளைச்சாவு அல்லது கடுமையான காயம் ஏற்படுகின்றது. இதிலிருந்து



நம்மை பாதுகாக்க தலைக்கவசம் மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இருசக்கரவாகனம் ஓட்டுபவர் மட்டுமே தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதே தவறான சிந்தனை. இருசக்கர வாகனத்தில் பயணம் செய்வோர் எல்லோருக்கும் தலைக்கவசம் அவசியம்.

**தலைக்கவசத்தின் நன்மைகள்**

***1. உயிர் காப்பான் :*** விபத்துக்களின் போது தலையில் ஏற்படும் மோதலின் தீவிரத்தைக் குறைத்து மரணத்தைத் தடுக்கிறது.

***2. கண்பாதுகாப்பு :*** வாகனம் ஓட்டும் போது தூசி, சிறுகற்கள் மற்றும் பூச்சிகள் கண்களில் விழுவதைத் தடுத்து தெளிவான பார்வையை அளிக்கிறது.

***3. காலநிலை பாதுகாப்பு :*** கடும் வெயில் மற்றும் மழையிலிருந்து தலை மற்றும் முகத்தை பாதுகாக்கிறது.

***4. காது பாதுகாப்பு :*** வேகமான காற்றின் இரைச்சலைக் குறைத்து கவன சிதறல் ஏற்படாமல் தடுக்கிறது.

**சமூகப் பொறுப்பு :**

பலர் காவல் துறையினரின் அபராதத்திற்கு பயந்து மட்டுமே தலைக்கவசம் அணிகின்றனர். இது தவறான அணுகுமுறை நம்மை நம்பி ஒரு குடும்பம் இருக்கிறது, என்பதை உணர்ந்து நமக்காகவும் நம் குடும்பத்திற்காகவும் தலைக்கவசம் அணிவதைத் கடமையாகக் கருதவேண்டும். வெறும் அலங்காரத்திற்காக இல்லாமல், தரமான முழு முக தலைக்கவசங்களை பயன்படுத்துவதே சிறந்தது.

***அன்பு உள்ளங்களே!***

"**தலைக்கவசம் உயிர் கவசம்**" என்பதை உணர்ந்து, இருசக்கர வாகனத்தில் செல்லும் ஒவ்வொரு முறையும் கட்டாயம் தலைக்கவசம் அணிவோம். நமது குடும்பத்தினரின் மகிழ்ச்சி நம் கையில் என்பதை உணர்வோம். சாலை விதிகளைக் கடைபிடிப்போம் பாதுகாப்பான பயணத்தைத் மேற்கொள்வோம்.

**சிந்தனைக்கு**

1. தலைக்கவசம் அணியாமல் விபத்துக்குள்ளான அனுபவம் உண்டா?
2. தலைக்கவசம் அணியாமல் நம் உழைப்பின் பயனில் எவ்வளவு இழந்திருக்கின்றோம் எனப்பகிர்ந்து கொள்வோம்.

# மன மாற்றம் பெற்று திருப்பணிகளாவோம்



திரு. S.T. **டேவிட் ராஜ்**,
களப்பணியாளர்.

தவக்காலம் என்றாலே தவம், செபம், தானம், தர்மம் மற்றும் திருப்பயணம். தேவையில் இருப்பவர்களுக்கு முடிந்த உதவிகளும் செய்வது உண்டு. தவக்காலம் இத்துடன் நின்று விடுவதில்லை. மாறாக தவக்காலத்தில் சிறப்பு என்னவென்றால் மனமாற்றம். மனமாற்றம் என்பது வார்த்தையுடன் நின்று விடக்கூடிய காரியம் அல்ல மாறாக செயல் வடிவம் கொடுத்து நாம் அதை செயல்படுத்தும் போதுதான் தவக்காலம் சிறப்படைகிறது.



லூக்கா நற்செய்தி 3-ம் அதிகாரம் எட்டாவது இறைவார்த்தை சொல்கிறது. "**மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்**" என்று. ஆம் அன்பான உறவுகளே! நாம் மனமாற்றம் பெற்று இறை இயேசுவின் பாதையில் திருப்பயணம் செய்கிறோம் என்றால் நம் குடும்பத்தில், அன்பியத்தில், அக்கம் பக்கத்தில் அனைவரிடமும் எந்த பிரிவினைகளும் இருக்காது. மாறாக அனைவரிடமும் முகம் பார்த்து அன்பான வார்த்தைகளை பேசக்கூடியவர்களாக வாழ முடியும்.

**மனமாற்றம்**

மனமாற்றம் என்பது நாம் மனதில் அல்லது மனதில் வைக்கக்கூடிய அல்லது பதிவு செய்யக்கூடிய நிகழ்வுகளை இடத்தை மாற்றி மாற்றி வைத்திருப்பதுண்டு. அதாவது மேல்மனத்தில் பதிவு செய்யக்கூடிய நிகழ்வுகளை அடி மனது என்கின்ற ஆழ் மனதிலும். ஆழ்மனதில் பதிவு செய்ய வேண்டிய நிகழ்வுகள் மேல் மனதிலும் பதிவு செய்து மனதை குழப்பி அதாவது மனநிலையை மாற்றி வைத்திருக்கிறோம். இதைத்தான் நாம் சரி செய்ய வேண்டும் மேல் மனதில் பதிவு செய்கின்ற நிகழ்வுகள் விரைவில் மறந்துவிடும். ஆழ்மனதில் பதிவு செய்கின்ற நிகழ்வுகளை மறந்து விடுவதற்கு அதிக நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் ஆகின்றது. இன்னும் கூடுதலாக

உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் மற்றவர் செய்த தவறுகள் அழியாது என்பார்கள். அந்த அளவுக்கு ஆழ்மனதில் பதிவு செய்கின்ற நிகழ்வுகள் நாம் மனதுக்குள் காட்சி படுத்திக் கொண்டே இருக்கும். இவ்வாறு மறக்காது அல்லது மாறாது என்கின்றதை மாற்ற வேண்டிய காலம் தான் தவக்காலம். மனமாற்றம் என்பது நம் மனநிலையை மாற்ற வேண்டியது. வாழ்க்கையில் நல்ல மாற்றம் நடைபெறவில்லை என்றால் ஏற்றம் காண முடியாது. அது போன்று பிறர் நமக்கு செய்த தவறுகளை ஆழ்மனதிலிருந்து மாற்றவில்லை என்றால், அதாவது தவறு செய்தவர்களே மன்னித்து ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், நாம் தவக்காலத்தை சரியாக பின்பற்றவில்லை என்பதுதான் உண்மை. நாம் பிறரை மன்னிக்கவில்லை என்றால் நாம் செய்த தவறுகளை ஆண்டவர் மன்னித்தார் என்ற நம்பிக்கையும் வருவதில்லை. இதைத்தான் ஆண்டவர் இயேசுவை தன் தந்தையிடம் வேண்டாம் சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த ஜெபத்தில் காணமுடிகின்றது. லூக்கா நற்செய்தி 11-ம் அதிகாரம் 4-வது இறைவார்த்தை சொல்கிறது "**எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும்.**" இத்தகைய மன்னிப்பு நமக்கு வேண்டுமானால் நாம் மனம்மாறி மற்றவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திருப்பயணிகளாவோம்**

பயணிகள் என்பது ஒரு காரியத்தை செய்ய நாம் எடுக்கின்ற முயற்சிக்கு பயணம் எனவும், பலர் இணைந்து செய்வதால் பயணிகள் எனலாம். திருப்பயணிகள் என்பது இறைஇயேசுவின் பாதையில் பயணம் செய்து அவர் காட்டிய நல்வழிகளை கடைபிடித்து, நான் என்ற நிலையை கடந்து நாம் என்ற உணர்வுடன் அனைவரும் இணைந்து பயணம் செய்வதை தான் திருப்பயணிகள் என்கின்றோம். குறிப்பாக தவக்கால பயணமான திருப்பயணம் மற்றவர்களுக்கு நன்மை கொடுக்கக்கூடிய வகையில் பயணம் செய்யும்போது (அதாவது) திருப்பயணம் நேரத்தில் ஆலயம் மட்டும் என்றில்லாமல் ஆலயத்துடன் காப்பகங்களையும் இணைத்து பயணிக்கும் போது அந்த பயணம் நம் ஆயர் அவர்கள் விரும்பும் திருப்பயணமாக மாறும் திருப்பணிகளாவோம், ஆகையால் இத்தகைய பயணம் செய்ய மனமாற்றம் பெற்று திருப்பணிகளாவோம்.

**சிந்திக்க, செயல்பட:**

1. எனக்கு பிறர் செய்த தவறுகளை நான் மன்னிக்கின்றேனா?
2. இந்த ஆண்டு தவக்காலத்தை அர்த்தமுள்ள வகையில் மாற்ற என்னென்ன செய்யப் போகிறேன் ?
3. இந்த ஆண்டு தவக்காலத்தில் என் பகையாளியை நண்பராக மாற்ற நான் என்ன செய்யப் போகிறேன்?

# இயேசுவின் கண்மணிகள் குழந்தைகள்

**R. சுஜா,**
சிறார் களப்பணியாளர்.



"**சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களை தடுக்காதீர்கள்**" (மத்தேயு 19 14) என்ற இறைவார்த்தையே, குழந்தைகள் அனைவரும் இயேசுவின் கண்மணிகள் என்பதற்கு சாட்சி.

**குழந்தைகள் தூய்மையில் உருவம்**

குழந்தைகளின் சிரிப்பு தூய்மையின் ஒளி. அவர்களின் உள்ளங்களில் கபடமில்லை, பொய்யில்லை. அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நம்பிக்கை பொருளாக ஒலிக்கிறது. அதனால் தான் இயேசு சீடர்களிடம் நீங்கள் சிறு பிள்ளைகளை போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் (மத். 18: 3) என்று கூறினார்.



**பாலர் சபை தினம்**

பிப்ரவரி 8-2026 அகில உலக பாலர்சபை தினமாக கொண்டாடப்படுகிறது. பாலர் சபை என்பது ஒரு அமைப்பு மட்டும் அல்ல. அது குழந்தைகள் இயேசுவை அறிந்து, அவரை நண்பராக ஏற்றுக்கொள்ளும் ஒரு அன்பு பள்ளி. அங்கே மழலை உள்ளங்களில் இறை நம்பிக்கையின் விதைகள் விதைக்கப்படுகின்றன. சிறார் இயக்கத்தின் பாதுகாவலி "**புனித குழந்தை இயேசுவின் தெரசாள்**" ஆகும் "**அன்பினால் அவனியே ஆண்டவருக்குள் ஆட்கொள்வோம்**" என்ற விருது வாக்கில் பாலர்சபை வகுப்புகள் நடைபெறுகின்றது. பாலர் சபையின் நிறங்கள் போல் குழந்தைகளும் வண்ணமயமானவர்கள். அங்கேதான் அன்பு செய்தல், உதவி செய்தல், கீழ்ப்படிதல், மதித்தல், பகிர்தல் போன்ற நற்பண்புகளை கற்றுக் கொள்கிறார்கள். அவர்களின் தூய மனங்களில் விதைக்கப்படும் நம்பிக்கையின் விதைகள் காலப்போக்கில் நல்ல கனிகளைத் தரும் என்பது உறுதி.

பலர் சபைக் குழந்தைகள் நாளைய திருச்சபையின் தூண்கள். அவர்கள் சிறுவயதிலேயே கடவுளை அன்பான தந்தையாகவும், இயேசுவை நெருங்கிய நண்பராகவும் உணர்ந்து வளர்கிறார்கள். ஜெபங்களில் அவர்களது மழலை குரல்கள் வானத்தை தொடுகின்றன.

பாடல்களில் அவர்களின் மகிழ்ச்சி துள்ளுகிறது. கதைகளில் கடவுளின் வார்த்தை அவர்கள் மனங்களில் மென்மையாக பதிகிறது. இந்த அனுபவங்கள் அனைத்தும் அவர்கள் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகின்றன.

இன்றைய வேகமான உலகில் குழந்தைகள் பல்வேறு அழுத்தங்களுக்கும், குழப்பங்களுக்கும் நடுவே வளரும் சூழல் திரைகள் நிறைந்த உலகம், போட்டி நிறைந்த வாழ்க்கை, அன்பிற்காக ஏக்கம் இவை எல்லாம் குழந்தைகளின் சிறு மனங்களை சோர்வடையச் செய்கின்றன. இத்தகைய சூழலில் பாலர் சபை வகுப்புகள் அமைதியையும் பாதுகாப்பையும் தரும் ஒரு ஆன்மீக இல்லமாக விளங்குகின்றது. இந்த குழந்தைகளை அன்புடன் அரவணைத்து வழிநடத்துவதும் அவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதும் நமது பொறுப்பு. எனவே இயேசுவின் அன்பையும், உண்மையும், நம்பிக்கையும் அவர்களின் இதயங்களில் நிரப்புவோம். இப்போது குழந்தைகள் அனைவரும் இயேசுவின் புன்னகையால் இந்த உலகில் ஒளிர்ந்து திருச்சபையின் பெருமையும், மனிதத்தின் மேன்மையும் உணர்ந்து வளர்வார்கள் என்பதில் பெருமைக் கொள்வோம். இயேசுவின் கனிமணிகளைப் போற்றுவோம். சின்னச் சின்னக் கைகளில் பெரிய பெரிய கனவுகளை விதைப்போம்.

**நன்றி!**

## வாழ்க்கைக்கு நிம்மதி தரும் மந்திரங்கள்

**உங்களை கோபப்படுத்தும்போது**
**மௌனமாய் இருங்கள்!**
**விலக்கி வைக்கும்போது**
**சற்று விலகியே இருங்கள்!**
**பெருமை படுத்தும்போது**
**துள்ளி எழாதிருங்கள்!**
**உதாசீனம் படுத்தும்போது**
**உடைந்து விடாமல் இருங்கள்!**
**அவமானப் படுத்தும்போது தவறியும்**
**அழாமல் இருங்கள்!**
**தோல்வி அடையும்போது**
**துணிந்து எழுங்கள்!**
**வெற்றி பெறும்போது**
**பணிந்து இருங்கள்!**
**காயப்படுத்தும் போது கண்டும்**
**காணாமல் இருங்கள்!**



## ஒரு குட்டி கதை

ஒருநாள் சாவியைப்பார்த்து சுத்தியல் கேட்டது. உன்னை விட நான் வலிமையான-வனாக இருக்கிறேன். ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகிறேன். ஆனால் நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே அதெப்படி? அதற்கு சாவி சொன்னது. நீ என்னை விட பலசாலிதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். பூட்டைத் திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய். ஆனால் நான் பூட்டின் இதயத்தைத் தொடுகிறேன். என்றதாம்.

**(அன்பு-உலகை-ஆளும்)**

## சிறார் பக்கம்

சிறுகதை

# தன்னம்பிக்கையின் விதை



திரு. S. **ஜாண் பெல்லார்மின்,**
களப்பணியாளர்.

ஒரு சிறிய கிராமத்தில் ஆதி என்ற சிறுவன் வாழ்ந்தான். அவன் அமைதியானவன்; ஆனால் புத்திசாலி. பள்ளியில் ஆசிரியர் கேள்வி கேட்டால், பதில் தெரிந்திருந்தாலும் கை உயர்த்த மாட்டான். "**நான் பேசினால் தவறு ஆகிடுமோ?**" "**எல்லாரும் சிரிப்பார்களோ?**" என்று அவன் மனம் பயப்படும். ஒருநாள் பள்ளியில் ஓவியப் போட்டி அறிவிக்கப்பட்டது. அனைவரும் மகிழ்ச்சியுடன் ஓவியம் வரையத் தொடங்கினர். ஆதி மட்டும் அமைதியாக அமர்ந்திருந்தான். அதைப் பார்த்த ஆசிரியர் கேட்டார், "**ஆதி, நீ ஏன் கலந்து கொள்ளவில்லை?**" அவன் மெதுவாக, "**எனக்கு நல்லா வரையத் தெரியாது சார்**" என்றான். ஆசிரியர் புன்னகையுடன், "**நல்லா வரையத் தெரிந்தால்தான் முயற்சி செய்ய வேண்டுமா? முயற்சிதான் முதல் வெற்றி**" என்றார்.



அந்த வார்த்தைகள் ஆதியின் மனத்தில் ஆழமாக பதிந்தன.அன்று இரவு, வீட்டில் ஒரு காகிதமும், பென்சிலும் எடுத்துக் கொண்டு அவன் தனது கிராமத்தை வரைந்தான். மலை, மரங்கள், வீடுகள், ஆறு, சூரியன்.... என்று.... முழுமையாக இல்லை; ஆனாலும் மனதார முயன்றான். மறுநாள் அவன் வரைந்த ஓவியத்தை போட்டியில் கொடுத்தான். பரிசு கிடைக்கவில்லை.

ஆனால் ஆசிரியர் அவனை அழைத்து, "**ஆதி, உன் ஓவியத்தில் உண்மை இருக்கிறது. அது மிகப் பெரிய வெற்றி**" என்றார். அந்த நாளிலிருந்து ஆதி மாறினான். பள்ளியில் கை உயர்த்தினான் தவறு செய்தாலும் பயப்படவில்லை. "**நான் முயற்சி செய்து முன்னேற முடியும்**" என்று நம்பினான். சில நாட்களுக்குப் பிறகு, அவனுடைய ஓவியம் பள்ளி அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டது. ஆதி அன்று புரிந்துகொண்டான்: "நம்மை நாமே நம்பும் நாள் தான் நம்முடைய உண்மையான வெற்றி தொடங்கும் நாள்" என்று .....

**சிந்தனை:**

"**தன்னம்பிக்கை என்பது பிறருடன் ஒப்பிடுவதால் கிடைப்பது அல்ல; மாறாக முயற்சி செய்வதாலும், தன்னை நம்புவதாலும் உருவாகும்**"....

## இளையோர் பக்கம்

# ஏன் இந்த அவசரம்? புரிந்துக் கொள்வோம்



- N.K. ரெஞ்சித்

மனித வாழ்வில் இளமைப் பருவம் என்பது உடல் வளர்ச்சியைவிட அதிகமாக மன வளர்ச்சி நிகழும் காலமாகும். குழந்தைப் பருவத்தின் பாதுகாப்பான உலகத்திலிருந்து பொறுப்புகள் நிறைந்த உலகத்துக்குச் செல்லும் இடைநிலைப் பயணம் இளமை. இந்தப் பயணத்தில் இளைஞர்கள் பல்வேறு உளவியல் குழப்பங்களையும் தேடல்களையும் எதிர்கொள்கிறார்கள். இவற்றை சரியாகப் புரிந்து கொண்டால், இளமையைச் சாதனைகளின் தளமாக மாற்ற முடியும்.



உளவியலாளர் எரிக் எரிக்சன் (Erik Erikson) கூறுவது போல, இளமைப் பருவத்தின் முக்கியமான மனப் போராட்டம் "அடையாளத் தேடல் (Identity vs Role Confusion)" ஆகும். "நான் யார்?", "எனது தனித்தன்மை என்ன?", "எனக்கு வாழ்க்கையில் என்ன வேண்டும்?" என்ற கேள்விகள் இளைஞரின் மனத்தில் தொடர்ந்து எழுகின்றன. சரியான வழிகாட்டல் கிடைக்காவிட்டால் குழப்பம். தன்னம்பிக்கை இழப்பு, திசை தெரியாத நிலை உருவாகும். ஆனால் ஆதரவு கிடைத்தால் உறுதியான அடையாளம் உருவாகி, வாழ்க்கை இலக்குகள் தெளிவாகும்.

இளமைப் பருவத்தில் மூளை வளர்ச்சியும் முக்கிய மாற்றங்களை அடைகிறது. அறிவியல்படி முடிவெடுக்கும் திறனை கட்டுப்படுத்தும் ஏனெனில் முன்மூளைப் பகுதி (Prefrontal Cortex) முழுமையாக வளர நேரம் எடுக்கும். அதனால் சில நேரங்களில் இளைஞர்கள் அவசர முடிவுகள், உணர்ச்சிப்பூர்வமான செயல்கள், அபாயத்தைப் பொருட்படுத்தாத நடத்தைகள் ஆகியவற்றில் ஈடுபடலாம். இது இயல்பான வளர்ச்சி நிலை என்ற புரிதல் பெற்றோர். ஆசிரியர்கள் மற்றும்

சமூகத்திற்குத் தெரிதல் வேண்டும். அதற்கான வழிகாட்டுதலை வழங்கலாம்.

உணர்ச்சிகளின் தீவிரம் இளமைப் பருவத்தின் இன்னொரு முக்கிய அம்சம். மகிழ்ச்சி, கோபம், காதல், ஏமாற்றம், தனிமை போன்ற உணர்வுகள் வேகமாக மாறக்கூடியவை உளவியலாளர் டேவியல் úLôp úUu á ßm "**உணர்ச்சி நுண்ணறிவு** (Emotional Intelligence)" இக்காலத்தில் வளர்க்கப்பட வேண்டும். தன் உணர்வுகளை புரிந்து கொள்வது. அவற்றை கட்டுப்படுத்துவது, பிறரின் உணர்வுகளை மதிப்பது ஆகிய திறன்கள் மனநலத்திற்கு அடித்தளமாக அமையும்.

நண்பர்கள் மற்றும் சமூக ஒப்பீடு இளமை மனதைக் கடுமையாக பாதிக்கும். "**அவர்கள் போல நான் இல்லை**" என்ற எண்ணம் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கலாம். சமூக ஊடகங்கள் இந்த ஒப்பீட்டு மனநிலையை மேலும் தீவிரப்படுத்துகின்றன. உளவியல் ரீதியாக ஒருவர் தன்னைத்தானே ஏற்றுக் கொள்ளும் Self-esteem வளர்ந்தால் மட்டுமே இந்த அழுத்தங்களை எதிர்கொள்ள முடியும். குடும்பத்தின் அன்பும், ஊக்கமும் இங்கு மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன.

இளமை என்பது சுயாதீனத்தை நாடும் காலம் "எனக்கு என் முடிவுகள் வேண்டும்" என்ற விருப்பம் இயல்பானது. ஆனால் கட்டுப்பாடின்றி சுதந்திரம் வழங்கினால் குழப்பம் ஏற்படும். மிகுந்த கட்டுப்பாடு விதித்தால் எதிர்ப்பு மனநிலை உருவாகும். உளவியல்படி, சமநிலையான வழிகாட்டல் (Balanced Parenting / Guidance) தான் ஆரோக்கியமான மன வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

மேலும், இளமைப் பருவத்தில் மன அழுத்தம், தோல்வி பயம், எதிர்கால அச்சம் போன்றவை உருவாகலாம். இவற்றை அடக்கி வைத்தால் மனநலச் சிக்கல்கள் உருவாகும் உரையாடல்,வாசிப்பு, கலை, விளையாட்டு, தியானம், இறைவேண்டல் போன்ற செயல்கள் மனதை சமநிலைப்படுத்த உதவுகின்றன.



இறுதியாக இளமை என்பது மனமும் உடலும் ஒரே நேரத்தில் வடிவமைக்கப்படும் காலம். சரியான உளவியல் புரிதல், நேர்மறை சிந்தனை. நல்ல உறவுகள் மதிப்புகள் ஆகியவை இணைந்தால், இளைஞர் தன்முனைப்புடன், பொறுப்புள்ள மனிதராக உருவாக முடியும். இளமையைப் புரிந்து கொள்வது என்பது எதிர்கால சமூகத்தைப் பாதுகாப்பதற்கான முதலீடாகும்.

# லூர்து அன்னையும் சிறுமி பெர்னிதத்தும்



வேதியர் மா. பேபிகமலா

உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவர்கள் மத்தியில், கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் என்றாலே இயேசுவை ஆண்டவராகக் கொள்வதோடு மட்டுமல்லாமல், கண்டிப்பாக மரியன்னை மற்றும் புனிதர்களின் பக்தர்களாகவே காணப்படுகிறார்கள். குறிப்பாக, மரியன்னையின் சீடத்துவ வாழ்க்கையில் பங்குபெறுகிறார்கள். காரணம், அம்மா என்றாலே அகிலமும் அன்புக்கு அடிபணியும். அத்தகைய தாயுள்ளத்தை தரணிக்கு தாரைவார்த்து, தரணிக்கே தியாகம் செய்தவர்தான் நம் அன்னைமரி.



இத்தகைய அன்புள்ளம்கொண்ட நம் அன்னை மரியாள் பல இடங்களில் ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதற்காக, சுமைகளைத் தீர்ப்பதற்காக மற்றும் வலியோரின் செருக்குள்ள இதயத்தை நொறுக்கிடுவதற்காக கள்ளம் கபடு இல்லாமல் தெளிந்த, திறந்த உள்ளம் படைத்த வறியோருக்கு காட்சி கொடுத்தார். காட்சிகள் மூலம் பல அற்புதங்களையும், ஆச்சரியங்களையும் மக்களுக்கு வழங்கி தன்னை வெளிப்படுத்தினார். அவர் காட்சி கொடுத்த இடங்கள், அவரது பண்புகள் மற்றும் புதுமைகளைக்கொண்டு மரியன்னைக்கு பல பெயர்கள் புனையப்பட்டன.

ஒவ்வொரு கத்தோலிக்கர்களும் ஏன் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதோரும் ஆண்டுக்கு ஒருமுறை கண்டிப்பாக மரியன்னையின் திருத்தலங்களுக்கு திருப்பயணம் செல்கிறார்கள். பொதுவாக, பலரும் வேளாங்கண்ணி, பூண்டி என எல்கைக்கு உட்பட்ட திருத்தலங்களுக்கும், வசதி படைத்தோர் அல்லது வாழ்நாளில் ஒருமுறையாவது என்போர் நாடு கடந்து, கடல் கடந்து திருத்தலங்களுக்கு செல்வது வழக்கம். நாம் இப்பொழுது, உலகிலேயே ஆண்டுக்கு பல மில்லியன் பார்வையாளர்களை பல பகுதிகளிலிருந்து ஈர்க்கின்ற லூர்து நகரில் காட்சி வழங்கிய லூர்து அன்னையைப்பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

பிரான்ஸ் நாட்டின் தென்மேற்கு பகுதியிலுள்ள மிடி பைரனீஸ் என்ற மாநிலத்தில் லூர்து நகரம் அமைந்துள்ளது. பிரான்ஸ் நாடு என்றாலே இயற்கை எளில் கொஞ்சும் மலைகள், சுற்றுலா இடங்கள், நதிகளின் பள்ளத்தாக்குகள், பனிச்சறுக்குகள் மற்றும் செயற்கை நுண் கலைகள், அதற்கான கட்டிடங்கள் என கேட்பதற்கு மட்டுமல்ல பார்ப்பதற்கும் மனதை கொள்ளையடித்துவிடும். இங்கு லூர்து நகரம் என்பது சிறிய நகரம்.

19 ஆம் நூற்றாண்டில் இந்நகரில் வாழ்ந்தவர்களில் ஒருவர்தான் பெர்னிதத் என்ற சிறுமி. இவளுடைய குடும்பம், தந்தை பிரான்சிஸ், தாய் லூயிஸ் சௌபிரஸ் மற்றும் மூன்று உடன்பிறந்தவர்கள். தந்தை மாவுமில்லில் பணியாற்றுவதால் கிடைக்கும் சிறிய வருமானத்தில் குடும்பம் நிறைவுடனும் சந்தோஷத்துடனும் வாழ்ந்துவந்தது. இச்சூழலில் துன்பங்கள் துவளாமல் தொடர்ந்து இவர்களின் குடும்பத்தைத் தாக்கியது.

திடீரென பிரான்சிஸ் அவர்கள் மில்லில் வேலை செய்யும்போது ஒரு சிறிய கல் அவரின் இடது கண்ணில் தெறித்து அவர் கண்பார்வையை இழந்தார். அதோடு, மாவுமில்லிலிருந்து இரண்டு மூட்டை மாவினை திருடியதாக பொய் பழிசுமத்தி எட்டு நாட்கள் சிறையிலடைக்கப்பட்டார். அதேநேரம் காலரா நோயும் பஞ்சமும் நாடெங்கிலும் பரவிற்று. இந்நோய் பிரான்சிஸ் அவர்களின் மூத்த மகளான பெர்னிதத்தைத் தாக்கியது.

வாழ்வதற்கு பணம் இல்லாத காரணத்தால், திக்கு தெரியாமல் நடுத்தெருவில் நின்ற பிரான்சிஸ் குடும்பத்திற்கு உதவும் நோக்கோடு உறவினர் ஒருவருக்கு தங்கள் இல்லத்தின் பழைய சிறையாகிய ஒரு அறையைக் கொடுத்தார். அதுவே, தந்தை வெளி சிறை, குடும்பம் உள் சிறை என மக்கள் இகழ்ந்து கேலிசெய்ய வழிகோலியது. மக்களின் கேலிக்கூத்து ஒருபக்கம் இருக்க, தனக்கு ஏற்பட்ட நோயின் தாக்குதலாலும், தனக்கு 14 வயதாகியும் பாடசாலை செல்லாததால் ஆங்கிலத்திலோ அல்லது பிரெஞ்சிலோ எழுதப் படிக்க ஏன் பேசவே தெரியாததாலும் மிகவும் மனவேதனைக்கு உள்ளானாள் பெர்னதத். அவள் பேசுவது மாற்று பிரெஞ்சு மொழி.

ஒவ்வொரு வாரமும் இந்த லூர்து நகரிலுள்ள மாதா கோவிலுக்குச் சென்று தனது உள்ளத்தின் குமுறல்களை, வேதனைகளைச் சொல்லிச்சொல்லி அழுது வருவாள். இந்த கோவிலின் அடிவாரத்தில் கிரிட்டோ என்ற குகையும், பொங்கி வரும் நீரூற்று, அதிலே? வாரி பருகுவதற்கான தேனடையினும் இனிதான தித்திக்கும் நீர் ஆகியவைக் காணப்படுகிறது. நாட்கள் நகர்ந்தன. ஓருநாள் அதாவது, 11.02.1858 அன்று பெர்னிதத் தன் தோழிகளுடன் வழக்கம்போல் சுள்ளிப் பொறுக்குவதற்காகவும், ஆடு மேய்ப்பதற்காகவும்

பாறைகள் நிறைந்த காட்டில் கேவ் நதிக்கரையோரம் சென்றிருந்தாள். அப்போது, பெர்னிதத்திற்கு வீசும் காற்றிலே ஒரு மெல்லிய ஓசைக் கேட்டது. சக தோழிகளுடன் நிமிர்ந்து பார்த்தவர்களுக்கு என்னே! ஆச்சர்யம். பாறையின் நடுவே ஒரு இளம்பெண் பேரழகியாக, கருணைமிகு பார்வையோடு, சுற்றிலும் ஒளிவட்டத்துடன் நின்றிருந்தாள். தாங்கள் காண்பது உண்மையா என நினைத்து வியப்பதற்குள் அந்த இளம்பெண் மறைந்துவிட்டாள்.

சிறுமி பெர்னிதத்திற்கு மெய் சிலிர்ப்பு, தூக்கமில்லை, மீண்டும் மீண்டும் அந்த இளம்பெண்ணை பார்க்க வேண்டும் என்ற அளவில்லா ஆர்வம். இரண்டாம், மூன்றாம், நான்காம் நாட்களும் அதே இடத்திற்கு ஓடோடிச் சென்றாள்; காட்சியையும் கண்டாள். அதோடு, அந்த இளம்பெண்ணும், பெர்னிதத்தும் ஒருவரோடொருவர் பேசத் துவங்கினர். இளம்பெண்ணின் வேண்டுதற்கிணங்க, கிரிட்டோவிற்கு தொடர்ந்து 15 நாட்கள் சென்றபோது, வெவ்வேறு விதங்களில் காட்சிகளும் உரையாடலும் நடைபெற்றன. எட்டாம் நாள் காட்சியின்போது, ''தவத்தில் ஈடுபடு! பாவிகளுக்காய் செபம் செய்!. என அந்த இளம்பெண் கூறினார். ஓன்பதாம் நாள் காட்சியின்போது பெர்னிதத்தை அருகில் அழைத்து, ''இந்த குகையில் உள்ள மண்ணை உன் கைகளால் கீறு! அதில் தோன்றும் ஊற்று நீரில் உன் உடலைக் கழுவியபிறகு அதனைப் பருகுவாயாக!'' என்று அந்த இளம்பெண் கூறினார். அவ்வேளையிலேயே மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் தன்னிடம் சொல்லப்பட்டவாறே செய்தாள். அந்நிமிடமே அவளிடம் இருந்து துன்புறுத்திய ஆஸ்துமா நோய் அவளை விட்டகன்றது. வியப்புடன் திரும்பிப் பார்த்தாள்; ஊற்று நீர் பெருக்கெடுத்தது.

13,14,15 ஆம் நாட்களின் காட்சிகளின்போது, ''போய் குருக்களையும், பொதுமக்களையும் திரளாக அழைத்து வந்து எனக்கு ஒரு ஆலயம் எழுப்பச் சொல்'' என மூன்று நாட்களிலும் கூறினார். 16 ஆம் நாளில்தான் அதாவது 16வது முறை காட்சியின்போதுதான் சிறுமி பெர்னிதத் தன்னோடு உரையாடும் அந்த இளம்பெண் யார் என அறியும் ஆவலோடு, ''ஒளிவெள்ளமாய் திகழும் மாதாவே! தாங்கள் யார்? எனக் கேட்டதும், அந்த இளம்பெண் ''நான்தான் புனித தூய மேரி மாதா!'' எனப் பதிலளித்தார். இதைக் கேட்டதும் பெர்னிதத் பெரும் மகிழ்ச்சி அடைந்தார். அடுத்த நாளே ஊர் மக்கள், படித்தவர், பெரியோர்களை கிரிட்டோவிற்கு அழைத்து வந்தாள். அன்றைய நாள் காட்சியின்போது மாதா முன் பெர்னிதத் மெழுகுவர்த்தி ஏந்தி நின்றாள். மெழுகுவர்த்தி உருகி 10 நிமிடங்கள் பெர்னிதத்தின் கரங்களிலேயே எரிந்தது. ஆனாலும் கையைப் பாதிக்கவில்லை. சுற்றி நின்றிருந்தவர்கள் மாதாவைப் பார்க்க முடியவில்லை எனினும், பெர்னதத்தின் மாதாவை முகம்முகமாய் சந்தித்த பரவசமான முகத்தைப் பார்த்து வியந்தனர். 18 ஆம் நாளின் காட்சியில் பெர்னிதத் தான் இதுவரைக் கண்டிராத

பேரழகும், கருணையும் துலங்கும் மாதாவைக் கண்டு வியந்தாள்.

உடனடியாக பேராயர்கள், பேரருள்பணியாளர்கள், பெரியோர்கள், அறிஞர்களைத் தேடிச் சந்தித்து, தனக்கு 18 முறை மாதா காட்சி கொடுத்ததையும், பெர்னிதத்திடம் செய்யச் சொன்ன காரியங்கள், அவர் தோன்றசெய்த ஊற்று நீரும் அதன் மகிமையும் மற்றும் மாதா தனக்கு கோவில் எழுப்ப கூறியதையும் அவர்களிடம் எடுத்தியம்பினாள். ஆனால், அவளது வார்த்தைகளை எவருமே நம்பவில்லை. சிறுமியோ, ''மாதாவின் வார்த்தைகளை உங்களிடம் எடுத்துக் கூறுவது மட்டுமே என் வேலை. அதை நம்புவதும், நம்பாமலிருப்பதுவும் உங்கள் விருப்பம்'' என்று கூறிவிட்டு சிறுமி பெர்னிதத் இந்நிகழ்விலிருந்து ஒதுங்கிவிட்டாள். ஆனால், அவளது வார்த்தைகள் நீதிமன்றத்தில் வழக்காடப்பட்டது. இதற்கிடையில், பல இடங்களிலிருந்து நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மாதாவின் அருள் வேண்டி, மாதாவால் தோற்றுவிக்கப்பட்ட ஊற்று நீரைப் பருகி நோய்களிலிருந்து அற்புத சுகங்களைப் பெற்றனர்.

மாதாவை நேரடியாக சந்தித்த பெர்னிதத்தைச் சந்தித்துப் பேசவும், வணங்கவும் மக்கள் அலைகடலென வந்தனர். ஆனால், தன் குடும்பம் எவ்வளவு வறுமையில் இருந்தபொழுதிலும், தன்னையோ தன் குடும்பத்தையோ பெருமைப்படுத்தி விளம்பரமாக்கும் சிறுமையை விரும்பவில்லை. எனவே, பெர்னிதத் நெவர்ஸ் என்ற நகருக்குச் சென்று, அங்கு ஒரு கிறிஸ்தவ கான்வென்டில் உடல்நிலை பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பணிவிடை புரிய தொடங்கினாள். தனது சொந்த நகருக்குச் செல்லாமலே, தனது 35 வயதிலேயே 1879 ஆம் ஆண்டு இயற்கை எய்தி, மாதாவினடிச் சேர்ந்தார். நெவர்ஸ் நகர கான்வென்டிலேயே அடக்கம் செய்யப்பட்டார்.

வழக்காடிய நிலையில் இருந்த வழக்கிற்காக பெர்னதத்தின் உடலானது 1909, 1919 ஆகிய இரு முறைகள் வெளியே எடுக்கப்பட்டது. அந்த உடலானது சிறிதளவுகூட சிதைவோ, துர்நாற்றமோ எதுவுமின்றி இருந்தது. அது வழக்காடிய அரசாங்கத்தையே திகைப்புக்குள்ளாக்கியது. எனவே, மாதாவின் விருப்பப்படியே லூர்து நகரில் மிக பிரமாண்டமாக மூன்று நிலையில் ஆலயம் எழுப்பப்பட்டது. அவ்வண்ணமே, மாதாவிற்கு லூர்து மாதா எனவும் பெயர் புனையப்பட்டது. இங்குள்ள ஊற்று நீரினால் அன்றும் இன்றும் பலரும் நோய்களிலிருந்து விடுதலை அடைகின்றனர். அதாவது மருத்துவமனைகளிலிருந்து நேரடியாகவும், சக்கர வண்டிகளில் ஊனமுற்றவர்கள் பெருங்கூட்டமாய் வருவதை இங்குக் காணலாம். மேலும், இங்குள்ள பதிவேட்டு புத்தகத்தில் குணமாகிய நோய்கள் குறிக்கப்பட்டிருக்கும். இந்த நீரினால்தான் குணமடைந்தனர் என்பதை அறிவியல் ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தின. அன்னை, பெர்னதத்திற்கு காட்சி வழங்கிய முதல் நாள் அதாவது பிப்ரவரி 11 ஆம் நாள் லூர்து அன்னையின் திருவிழாவாக கத்தோலிக்க திருஅவையால் கொண்டாடப்படுகிறது. அதே தினத்தை 1992 ஆம்

ஆண்டிலிருந்து திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் அவர்களால் உலக நோயாளர் நாளாக (World day of the Sick) அறிவிக்கப்பட்டு திருஅவையால் பின்பற்றப்படுகிறது.

லூர்து அன்னை காட்சி வழங்கியதன் நோக்கமே, நோய் தீர்ப்பது மட்டுமல்ல. மனந்திரும்பச் செய்து ஆறுதலளிப்பது. இதற்காகவே, எவ்வகை துன்ப வேளையிலும், எப்பொழுதுமே மரியாதையுடனும் தாழ்ச்சியுடனும் உண்மையைப் பேசுபவளாயும், கீழ்படிதலுள்ள கள்ளங்கபடற்றவளாயும் திகழ்ந்த சிறுமி பெர்னிதத்தைத் தேர்ந்தெடுத்து, தவம் செய்; பாவிகள் மனம்திரும்ப செபம் செய் என்றுக் கூறினார். இங்கு கட்டப்பட்ட ஆலயமும் நம்பிக்கையின் ஆலயமாகவேத் திகழ்கிறது. குறிப்பாக, இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்களின்மேல் கொண்டுள்ள அளவில்லா நம்பிக்கையால் பக்தர்களைக் கட்டுப்படுத்தவோ, மெழுகுவர்த்தி விற்கவோ (நாமே பணம் போட்டு எடுத்துச் செல்லலாம்), புனித நீரை குழாய்களிலிருந்து நிரப்புவதற்கோ எங்குமே பணியாளர்கள் இல்லை. இத்தகைய நம்பிக்கையானது, இறைமகன் இயேசுவின்மீது எப்படி நம் நம்பிக்கையைப் பதிய வைப்பது என்பதை உணர்த்துகிறது.

# பாரம்பரிய கலைகள்


## கோ கோ விளையாட்டு விதிமுறைகள் மற்றும் விளையாட்டு முறை

- M. **மேரி லிசி**,
களப்பணியாளர்.



**முன்னுரை**

கோ கோ என்பது இந்தியாவின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று இதுவேகம் சுறுசுறுப்பு புத்திசாலித்தனம் மற்றும் குழு ஒருமைப்பாட்டை வளர்க்கும் ஒரு முக்கியமான வெளிப்புற விளையாட்டு ஆகும். பள்ளி மாணவர்களிடமும், விளையாட்டுப் போட்டிகளிலும் கோ கோ மிகவும் பிரபலமாக விளையாடப்படுகிறது.



**கோ கோ விளையாட்டு நோக்கம்**

இந்த விளையாட்டின் முக்கிய நோக்கம் எதிரணி வீரர்களை விரைவாக தொடுவதும் தப்பித்து ஓடும் வீரர்கள் தொடப்படாமல் இருப்பது குறைந்த நேரத்தில் அதிகமான வீரர்களை வெளியேற்றிய அணி வெற்றி அடையும்.

**மைதான அமைப்பு**

கோ கோ விளையாட்டு செவ்வக வடிவம் மைதானத்தில் நடைபெறும். மைதானத்தின் நடுவில் ஒரு மத்திய கோடு வரையப்படும் அந்த கோட்டு ஒருபுறம் குறுக்கு கோடுகள் அமைந்திருக்கும் ஒவ்வொரு குறுக்கு கோட்டு முடிவிலும் கம்பங்கள் அல்லது (Poles) வைக்கப்பட்டிருக்கும்.

**அணியின் அமைப்பு**

ஒவ்வொரு அணியிலும் பொதுவாக 12 வீரர்கள் இருப்பார்கள் இதில் ஒன்பது பேர் ஒரே நேரத்தில் மைதானத்தில் விளையாடுவார்கள் மீதமுள்ளவர்கள் மாற்று வீரர்களாக இருப்பார்கள்.

**விளையாடும் முறை**

ஒரு அணி தொடுபவர் அணியாகவும் மற்றைய அணி தப்பிப்பவர் அணியாகவும் செயல்படும். தொடுபவர் அணியில் எட்டு வீரர்கள் மத்திய கோட்டில் ஒரே திசையில் அமர்ந்திருப்பார்கள் ஒரு வீரர் எழுந்து தப்பிப்பவர்களை தொட முயல்வார். அமர்ந்திருக்கும் வீரர்களுக்கு கோ என்று சொல்லித் தட்டினால் அவர் எழுந்து தொடர அனுமதி பெறுவார்.

**முக்கிய விதிமுறைகள்**

கோ கோ சொல்லும்போது தெளிவாக சொல்ல வேண்டும் தொடரும் வீரர் திசை மாற்றம் செய்ய கம்பத்தை சுற்றி ஓட வேண்டும் கோட்டை மீறி ஓடக்கூடாது. தப்பிப்பவர் வீரர் தொடப்பட்டவுடன் வெளியேற்றப்படுவார். குறிப்பிட்ட நேரத்திற்கு விளையாட்டு நடைபெறும் வெற்றி மற்றும் மதிப்பெண், தொடுபவர் அணி அதிகம் எண்ணிக்கையிலான தப்பிப்பவர் வீரர்களை வெளியேற்றினால் அதிக மதிப்பெண்கள் பெறும். இரு அணிகள் மொத்த மதிப்பெண்களை வைத்து வெற்றி தீர்மானிக்கப்படுகிறது

**கோ கோ விளையாட்டின் பயன்கள்**

கோ கோ விளையாட்டு உடல் வலிமை, வேகம், சமநிலை மற்றும் மன ஒருமைப்பாட்டை மேம்படுத்துகிறது. இது ஒரு குழு உணர்வு தலைமை திறன் மற்றும் விரைவு, முடிவெடுக்கும் திறனை வளர்க்க உதவுகிறது.

**முடிவுரை**

கோ கோ விளையாட்டு வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல அது உடல் மற்றும் மன வளர்ச்சிக்கான ஒரு சிறந்த பயிற்சியாகும். பாரம்பரிய விளையாட்டுகளை பாதுகாத்து வளர்ப்பது நமது கடமையாகும்.

# நலத்திட்டங்கள்

## புத்தன்கடை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| குலசேகரம் | உண்ணீர்கோணம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 3,000/- |
| | | ஏழைக்கு உதவி | 9 | 9,000/- |
| | சூரிய கோடு அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 500/- |
| | | ஊனமுற்றோர் இல்லம் | | 500/- |
| கோட்டூர்கோணம் | புனித தோமையார் அன்பியம் | ஏழை மாணவி உதவி | | 500/- |
| | புனித யோவான் அன்பியம் | ஏழை முதியோருக்கு உதவி | | 500/- |
| ஈஞ்சக்கோடு | புனித குழந்தை தெரசா அன்பியம் | ஏழை மாணவி உதவி | | 800/- |
| நாகக்கோடு | புனித அன்னை வேளாங்கண்ணி அன்பியம் | நுரையீரல் பாதிக்கப்பட்ட மாணவிக்கு மருத்துவ உதவி | | 7,500/- |
| | புனித குழந்தை தெரசா அன்பியம் | | | 5,500/- |
| | புனித லூர்து மாத அன்பியம் | | | 8,000/- |
| | புனித சவேரியார் அன்பியம் | | | 5,100/- |
| | புனித தோமையார் அன்பியம் | | | 5,000/- |
| | புனித அன்னை தெரசா அன்பியம் | | | 6,000/- |
| | புனித அருளானந்தர் அன்பியம் | | | 5,500/- |
| | புனித மறைசாட்சி தேவசகாயம் அன்பியம் | | | 3,600/- |
| | புனித பாத்திமா அன்னை அன்பியம் | | | 1,500/- |
| | புனித யூதா ததேயு அன்பியம் | | | 7,500/- |
| பேச்சிப்பாறை | புனித வேளாங்கண்ணி மாதா அன்பியம் | திருமண உதவி | | 2,500/- |
| | புனித அல்போன்சம்மாள் அன்பியம் | மருத்துவ உதவி | | 5,000/- |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| சித்தன்தோப்பு | அன்பிய ஒருங்கிணையம் | ஏழைகள், படுக்கை நோயாளி (பொருட்கள்) | | 10,500/- |
| பாளையம் அன்னைநகர் | புனித அல்போன்சம்மாள் அன்பியம் | ஏழைகள் உதவி | 2 | 11,000/- |
| | புனித மரிய கொரற்றி அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 4,000/- |
| முரசங்கோடு | அன்னை வேளாங்கண்ணி அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 500/- |
| | புனித அருள் மாதா அன்பியம் | ஏழைகள் உதவி (துணி) | 3 | 2,400/- |
| பண்டாரவிளை | குழந்தை இயேசு அன்பியம் | வழுக்கம் பாறை முதியோர் இல்லம் (மதிப்பில் பொருட்கள்) | | 10,000/-, 2,000/- |
| | அன்பிய ஒருங்கிணையம் | மத்திக்கோடு பாறை முதியோர் இல்லம் (மதிப்பில் பொருட்கள்) | | 4,000/-, 6,000/- |
| பிலாவிளை | அன்பிய ஒருங்கிணையம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 10 | 5,405/-, 2,000/- |
| குருந்தன்கோடு | 3-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| வர்த்தான்விளை | 2-ம் அன்பியம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 10 | 300/- |
| | | | 5 | 500/-, 500/- |
| கோணங்கோடு | அன்பிய ஒருங்கிணையம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 65 | 550/-, 500/- |
| கண்டன்விளை | குழந்தை இயேசுவின் தெரசா அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 500/- |
| | | படுக்கை நோயாளி | 1 | 500/- |
| | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 10,000/- |
| | புனித பாத்திமா அன்னை அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 500/- |
| | | ஏழை மாணவன் உதவி | 1 | 5,000/- |
| | புனித திருகல்யாண மாதா அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| | புனித செபமாலை அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | அன்பிய ஒருங்கிணையம் | புற்றுநோயாளி | 1 | 10,000/- |
| | | ஊனமுற்ற படுக்கை நோயாளி மதிப்பில் உணவுப் பொருட்கள் | 6 | 25,000/- |
| | புனித செபமாலை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 500/- |
| | | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| கண்டன்விளை | புனித ஆரோபண அன்னை அன்பியம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 1 | 1,500/- |
| | | மருத்துவ உதவி | 2 | 5,500/- |
| | சிறுமலர் அன்பியம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 1 | 500/- |
| | | ஏழைகள் உதவி | 4 | 1,000/- |
| | புனித கிளாரம்மா அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| | | மருத்துவ உதவி | 1 | 8,300/- |
| | புனித தொன்போஸ்கோ அன்பியம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 1 | 500/- |
| | புனித அருளானந்தர் அன்பியம் | ஏழைகள் உதவி (மதிப்பில் பொருட்கள்) | 3 | 500/-, 5,000/- |
| | புனித சகாய மாதா அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 4,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 500/- |
| | | மருத்துவ உதவி | 2 | 12,750/- |
| | புனித கார்மல் அன்னை அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 10,00/- |
| | | மருத்துவ உதவி (மதிப்பில் பொருட்கள்) | 2 | 2,000/-, 2,000/- |
| கண்டன்விளை | புனித லூயிஸ் மார்டின் அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 1,400/- |
| | | மருத்துவ உதவி | 2 | 5,000/- |
| | புனித தஸ்னேவிஸ் அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 6,000/- |
| | புனித மரிய கொரற்றி அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 2,000/- |
| | புனித அசிசியார் அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 1,000/- |
| | | ஏழைகள் உதவி | 3 | 500/- |
| | | படுக்கை நோயாளி | 1 | 1,000/- |

| | | | |
|---|---|---|---|
| காரங்காடு | வட்டாரம் சார்பாக | படுக்கை நோயாளிகள் (மதிப்பில் பொருட்கள்) | 1,000/-, 1,000/- |
| | வட்டாரம் சார்பாக அன்பிய மாநாட்டில் | படுக்கை நோயாளிகள் (மதிப்பில் பொருட்கள்) | 1,000/-, 1,000/- |
| | வட்டாரம் சார்பாக பொங்கல் விழா | படுக்கை நோயாளிகள் (மதிப்பில் பொருட்கள்) | 1,000/-, 6,000/- |

## முளகுமூடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| செம்பருத்திவிளை | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | | 10,5700/- |
| முளகுமூடு | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி மற்றும் கல்வி உதவி | | 34,000/- |
| குழிவிளை | அன்பிய ஒருங்கிணையம் | ஏழைக்கு உதவி | | 2,600/- |

## வேங்கோடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| இலவுவிளை | புனித ஆரோக்கிய அன்னை | மருத்துவ உதவி | 2 | 2,000/- |
| | புனித லூர்து அன்னை | ஏழைக்கு உதவி (ஆடை) | 2 | 500/- |
| | புனித செபஸ்தியார் அன்பியம் | ஏழைக்கு உதவி (ஆடை) | 3 | 1,500/- |
| வாவறை | 3-வது அன்பியம் | ஏழைக்கு உதவி (புத்தாடை) | 3 | 1,500/- |
| வேப்புவிளை | ஜிவன்ஜோதி முதியோர் இல்லம் தொலையாவட்டம் | | | 15,000/- |
| | கெல்லங்கோலை குழந்தைகள் காப்பகம் | | | |
| புல்லாணி | அன்பிய மக்கள் | மளிகைப் பொருள் (ஏழை) | 2 | 3,000/- |
| | புனித பவுல் அன்பியம் | புத்தாடை மளிகைப் பொருள் | 1 | 2,500/- |
| விழுந்தயம்பலம் | தூய மிக்கேல் அதிதூதர் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| வெட்டுவிளை | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 2,500/- |

# மாத்திரவிளை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| மாத்திரவிளை | புனித வாளனார் அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 3,000/- |
| | புனித ஞானப்பிரகாசியார் அன்பியம் | ஏழைக்கு உதவி | 2 | 2,000/- |
| | புனித மின்னல் மாதா அன்பியம் | ஏழைகுடில் வீடு | 1 | 2,000/- |
| | தேவ மாதா 1 அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 7,000/- |
| | தேவ மாதா 2 அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 2,500/- |
| | பெரிய நாயகி அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 5,500/- |
| | புனித வின்செண்ட்-தே-பவுல் அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 1,000/- |
| | புனித லூர்து அன்னை அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 1,500/- |
| பூட்டேற்றி | புனித அந்தோணியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | புனித சவேரியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித அல்போன்சாள் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித இஞ்ஞாசியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | இயேசுவின் திருஇருதய அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| வாள்வச்சக்-கோஷ்டம் | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 800/- |
| சேரிக்கடை | புனித அந்தோணியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| | புனித குழந்தை தெரசா அன்பியம் | ஏழைக்கு உதவி | 2 | 1,000/- |
| | புனித அல்போன்சாள் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,500/- |
| முள்ளங்கனா-விளை | புனித காணிக்கை அன்னை அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 2,000/- |
| | புனித ஞானப்பிரகாசியார் அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 2,000/- |
| | புனித பூண்டி மாதா அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| முள்ளங்கனா-விளை | புனித அன்னை தெரசா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,500/- |
| | புனித செபமாலை அன்னை அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 5,100/- |
| | புனித சிசிலியம்மாள் அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 1,000/- |
| | புனித பனியமய அன்னை அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 7,000/- |
| | புனித மின்னல் மாதா அன்பியம் | பிலாங்காலை முதியோர் இல்லம் | 1 | 11,000/- |
| நட்டாலம் | புனித அகுஸ்தினார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித ஜார்ஜியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | புனித யாக்கோபு அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |

## பங்களவில் புதிய நிர்வாகிகள்

### வேங்கோடு மறைவட்டம்

#### வாறுவிளை

தலைவர் : கன்னி மரியபாய்
து.தலைவர் : எரோணிமுஸ்
செயலர் : அஜிதா
து.செயலர் : லில்லி புஷ்பம்
பொருளர் : விப்சி

#### காப்புகாடு

தலைவர் : அருள் சக்கரவர்த்தி
து.தலைவர் : றெறோபின் ஜாண்
செயலர் : ஷைனி
து.செயலர் : அனிதா
பொருளர் : ஆஷிகா

#### வேங்கோடு

தலைவர் : ஜெயராஜா
து.தலைவர் : திருமதி. ரெமா
செயலர் : திருமதி. லலிதா
து.செயலர் : திருமதி. சந்தியா
பொருளர் : திருமதி. சாந்தி

#### இலவுவிளை

தலைவர் : திருமதி. C. பிந்து
து.தலைவர் : திருமதி. E. றோஸ் மேரி
செயலர் : திருமதி. Y. ஸ்டெல்லா ராணி
து.செயலர் : திருமதி. மேரி ஷாலினி
பொருளர் : திருமதி. விக்டோறியா

### திரித்துவபுரம் மறைவட்டம்

#### குழித்துறை

தலைவர் : திருமதி. மெற்றீஸ்மேரி
து.தலைவர் : திருமதி. ஜோதி
செயலர் : திருமதி. சுஜிதாமேரி
து.செயலர் : திருமதி. சோபனா
பொருளர் : திருமதி. சிந்து

**அன்பியப் பணிக்குழு**

**YouTube : https://www.youtube.com/channel UCEID2zYUEd7Bmy_MeyNM0g**
**Website : bcckuzhithurai.com**
**E-mail ID : bcckuzhithurai@gamil.com**
**Office No.: 7358947467**

# பொன்மலை தியான இல்லம்
## *சுங்கான்கடை*
## குழித்துறை மறைமாவட்டம்

**சுங்கான்கடை பொன்மலையில் தவக்கால சிறப்பு நிகழ்வுகள்**

இயேசு இவ்வுலகில் நமது மீட்பு விடுதலைக்காக நடந்து சென்ற பாதை சிலுவை பாதை. அன்று கல்வாரி மலை நோக்கி, இன்று பொன்மலை நோக்கி நடக்க, தியானிக்க, இறைவேண்டல் செய்ய, இறை செய்தி கேட்க 2026 தவக்காலம் உங்களை அழைக்கிறது.

இத்தவக் காலத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் திருச்சிலுவைப் பாதை, தியான உரை, திருப்பலி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நமது மறைமாவட்ட அன்பிய இறைமக்கள் ஒவ்வொரு ஆண்டும், இந்நிகழ்வை மிக அர்த்தமுள்ள விதத்தில் ஒருங்கிணைந்து பங்கேற்பது பாராட்டுக்குரியது. இந்த ஆண்டும் ஒவ்வொரு வட்டார அன்பிய இறைமக்களும், நம்பிக்கையோடும், பத்தியோடும், பெரும் திரளாக கலந்து கொள்ளவும், இயேசுவின் திருப்பாடுகளை தியானித்து அருள் ஆசி பெறவும், தகுந்த தயாரிப்புகளுடன் கலந்து கொள்ள மிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

| வ எண் | நாள் | வாரம் | மறைவட்ட அன்பிய ஒருங்கிணையம் | சிந்தனை |
|---|---|---|---|---|
| 1 | 20.02.26 | 1-ம் வாரம் | முளகுமூடு | நமது வாழ்க்கையை நல் வாழ்வாக்க ஓர் அழைப்பு |
| 2 | 27.02.26 | 2-ம் வாரம் | திரித்துவபுரம் | சிலுவைப்பாதை ஓர் நம்பிக்கையின் பயணம் |
| 3 | 06.03.26 | 3-ம் வாரம் | காரங்காடு | சிலுவைப்பாதை நம் வாழ்வு பாதை |
| 4 | 13.03.26 | 4-ம் வாரம் | மாத்திரவிளை | சிலுவைப்பாதை ஒரு இலட்சியப் பாதை |
| 5 | 20.03.26 | 5-ம் வாரம் | வேங்கோடு | இன்றைய சூழலில் சிலுவைப்பாதை |
| 6 | 27.03.26 | 6-ம் வாரம் | புத்தன்கடை | மாற்றத்தை முன் வைக்கும் மாற்று சிலுவைப்பாதை |

**நிகழ்வுகள்**

காலை 9.00 மணி - திருச்சிலுவைப் பாதை
10:10 மணி - தவக்கால தியான உரை
11:45 மணி - திருப்பலி
12:30 மணி - நண்பகல் உணவு

**குருத்து ஞாயிறு : 29/03/2026**

நேரம் : மாலை 300 மணி **குருத்தோலை அர்ச்சிப்பு பவனி**
தலைமை : மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**
மறைமாவட்ட ஆயர்

**அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள**
**அன்புடன் அழைக்கும்**
அருள்பணி. ***அ. மரிய வின்செனட்***
மற்றும்
பொன்மலை அருட்தந்தையர்கள்

# தவக்காலத்தில் நான்

திரு. S. **ஜாண் பெல்லார்மின்,**
களப்பணியாளர்.

**நாள் 1 : அமைதி (மௌனம்)**
சிந்தனை : மௌனம் என் உள்ளத்தை இறைவனிடம் திறக்கிறது.
ஜெபம் : ஆண்டவரே, என் உள்ளத்தை அமைதியால் நிரப்பும்.

**நாள் 2 : ஜெபம்**
சிந்தனை : ஜெபம் என்னை வழிநடத்தும் ஒளி.
ஜெபம் : இன்று முழுவதும் உம்மோடு நடக்க உதவும் இறைவா.

**நாள் 3 : தியாகம்**
சிந்தனை : தியாகம் என்னை சுயநலத்திலிருந்து விடுவிக்கிறது.
ஜெபம் : நான் விட்டுக் கொடுத்து வாழ வரம் தா இறைவா.

**நாள் 4 : பொறுமை**
சிந்தனை : பொறுமை உண்மையான வலிமை.
ஜெபம் : சோதனைகளில் திடமாக நிற்க வலிமை தா இறைவா.

**நாள் 5 : மன்னிப்பு**
சிந்தனை : மன்னிப்பு இதயத்தை இலகுவாக்கும்.
ஜெபம் : பிறரை மன்னிக்க நல் மனம் தா இறைவா.

**நாள் 6 : நன்மை**
சிந்தனை : சிறிய நன்மையும் பெரிய மாற்றம்.
ஜெபம் : இன்று ஒரு நல்ல செயலைச் செய்ய வழிகாட்டு இறைவா.

**நாள் 7 : அன்பு**
சிந்தனை : அன்பு செயலில் வெளிப்பட வேண்டும்.
ஜெபம் : என் செயல்களில் அன்பை காட்ட உதவி செய்யும் இறைவா.

**நாள் 8 : அமைதி**
சிந்தனை : அமைதி இறைவனின் பரிசு.
ஜெபம் : நான் அமைதியுடன் வாழ வரம் தா இறைவா.

**நாள் 9 : சுயஆராய்ச்சி**
சிந்தனை : பிறரை விட என்னை முதலில் திருத்துவேன்.
ஜெபம் : என் தவறுகளை நான் உணர வரம் தா இறைவா.

**நாள் 10 : நன்றி**
சிந்தனை : நன்றி உள்ளத்தை மகிழ்வாக்கும்.
ஜெபம் : நான் எல்லாவற்றிற்கும் நன்றி கூற என்னை வழிநடத்தும் இறைவா.

**நாள் 11 : நேர்மை**
சிந்தனை : நேர்மையே என் அடையாளம்.
ஜெபம் : என்னை உண்மையின் வழியில் நடத்தும் இறைவா.

**நாள் 12 : கட்டுப்பாடு**
சிந்தனை : சுயகட்டுப்பாடு ஆன்மிக வளர்ச்சி.
ஜெபம் : ஆசைகளை கட்டுப்படுத்த வலிமை தா இறைவா.
**நாள் 13 : கருணை**
சிந்தனை : ஏழைகளில் இறைவனை காண்கிறேன்.
ஜெபம் : கருணையுள்ள இதயம் தா இறைவா.
**நாள் 14 : நம்பிக்கை**
சிந்தனை : நம்பிக்கை இருளிலும் ஒளி.
ஜெபம் : நம்பிக்கையை இழக்காமல் காக்கும் வரம் தா இறைவா.
**நாள் 15 : இனிய சொற்கள்**
சிந்தனை : மென்மையான சொற்கள் காயங்களை ஆற்றும்.
ஜெபம் : என் நாவை கட்டுப்படுத்த ஆற்றல் தா இறைவா.
**நாள் 16 : செவிமடுத்தல்**
சிந்தனை : செவிமடுப்பது அன்பின் அடையாளம்.
ஜெபம் : கவனமாகக் கேட்கும் வரம் தா இறைவா.
**நாள் 17 : துன்பம்**
சிந்தனை : துன்பம் என்னை வளர்க்கிறது.
ஜெபம் : துன்பத்தில் நான் தைரியம் பெற வரம் தா இறைவா.
**நாள் 18 : ஒப்புக்கொள்**
சிந்தனை : தவறை ஒப்புக்கொள்வது தைரியம்.
ஜெபம் : நான் பணிவுடன் மாற உதவும் இறைவா.
**நாள் 19 : பகிர்வு**
சிந்தனை : பகிர்ந்தால் நன்மை பெருகும்.
ஜெபம் : பகிரும் மனம் தா இறைவா.
**நாள் 20 : ஒப்படைப்பு**
சிந்தனை : இறைவனின் சித்தமே சிறந்தது.
ஜெபம் : என் வாழ்வை உமக்கு அர்ப்பணிக்க வரம் தா இறைவா.

## ஞாயிறு வழிபாடுத் தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 01.02.2026 | செப். 2:3. 3:12-13 | 1 கொரி. 1: 26-31 | மத். 5: 1-12a |
| 2 | 08.02.2026 | எசா. 58: 7-10 | 1 கொரி. 2:1-5 | மத். 5: 13-16 |
| 3 | 15.02.2026 | சீரா. 15:15-20 | 1 கொரி. 2:6-10 | மத். 5:17-37 |
| 4 | 22.02.2026 | தொ.நூ. 2: 7-9; 3:1-7 | உரோ. 5:12-19 | மத். 4:1-11 |

அடித்தளம் விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298,
7358947467

அன்பிய இயக்குநர்
அன்பியப் பணிக்குழு, டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை - 629 179

# மறைவட்ட செயற்குழு



வேங்கோடு



மாத்திரவிளை



காரங்காடு



திருத்துவபுரம்



முளகுமூடு வட்டார நிர்வாகிகள் கூட்டம்



தக்கலை செயல்தளம்



புத்தன்கடை வட்டார நிர்வாகிகள் கூட்டம்

# குழித்துறை மறைமாவட்டம்
# அன்பியப் பணிக்குழு
## கருத்தரங்கு 2026

குழித்துறை மறைமாவட்டம், நிறைவாழ்வு மனிதர்களையும், நிறைவாழ்வு சமூகத்தையும் உருவாக்கும் நோக்கில் அன்பியப் பணிக்குழு 2026 - ஆம் ஆண்டுத்திட்டத்தின்படி, அன்பியங்களை வலுப்படுத்தவும், பங்கேற்பை அதிகரிக்கவும், அன்பியங்களைப் புதுமுகப்படுத்தவும், தேர்தல் விழிப்புணர்வு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முதற்படியாக, பிப்ரவரி மாதம் பங்கு மற்றும் கிளைப்பங்கு ஒருங்கிணையங்களின் நிர்வாகிகளுக்கு ஒரு நாள் கருத்தரங்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் தாங்களும் கலந்து கொண்டு, தங்கள் பங்கு மற்றும் கிளைப்பங்குகளிலுள்ள அன்பிய ஒருங்கிணைய நிர்வாகிகள் ஐந்து நபர்கள் அல்லது ஆர்வமுள்ள ஐந்து நபர்களை கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 14.02.2026<br>சனிக்கிழமை | காலை 9.30 மணி முதல்<br>மாலை 4.30 மணி வரை | தூய சவேரியார்<br>பொறியியல் கல்லூரி,<br>கலையரங்கம் சுங்கான்கடை |

| | | |
|---|---|---|
| தலைமையுரை | : | மேதகு ஆயர் ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்,<br>குழித்துறை மறைமாவட்டம் |
| அன்பியத்தின் மறுமலர்ச்சி | : | மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்<br>மார்த்தாண்டம் மறைமாவட்டம் |
| அரசியல் விழிப்புணர்வு | : | பேரருள்பணி M. C. இராஜன் |
| குடும்பம் நேற்றும் இன்றும் | : | திரு. குமரி ஆதவன் |

**பயிற்சிக்கட்டணம்**
ரூ.100
(நபர் ஒன்றுக்கு)

**தோழமையில்**

அருட்பணி. மோ. ஆல்வின் விஜய்

குறிப்பு : மதிய உணவு வழங்கப்படும்

தொடர்புக்கு : 9787764674, 7598405038, 8012621206, 9488100947, 9790403512, 9047742233

அலுவலகம் : 7358947467, 9487110298